இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 இதழ் : 07 திகதி : 23.04.2023 விலை : 50.00

# பதுளை மறைமாவட்டத்திற்குப் புதிய ஆயராக அதிவண. ஜீட் நிசாந்த சில்வா அடிகளார்



பதுளை மறைமாவட்டத்திற்குப் புதிய ஆயராக அதிவண. ஜீட் நிசாந்த சில்வா அடிகளார் கடந்த 22ம் திகதி மேதகு வின்சன்ட் பர்னாந்து SSS ஆண்டகையினால் பதுளை புனித மரியாள் பேராலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டார்.




புதிய ஆயர் பற்றிய முழு விபரத்தினை பக்கம் 2ல் காண்க

## இறை அரசுக்காக சரியானதைத் துணிச்சலோடு நிறைவேற்றியவர் அமரர் அருட்பணி கருணாரட்ணம் அடிகள்

### அடிகளாரின் 15 ஆவது ஆண்டு நிறைவில் அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அடிகள்





20.04.2008 முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வன்னிவிளாங்குளம் அம்பாள்புரம் 6ம் கட்டைப் பகுதியில் பயங்கரவாதத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சேவியர் கருணாரட்ணம் (கிளி பாதர்) அவர்களின் 15ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனிக்குளம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

இவ் இரங்கல் திருப்பலியில் மறையுரையாற்றியபோதே அருட்பணி றெக்ஸ் சவுந்தரா அடிகளார் மேற்கூறியவாறு குறிப்பிட்டார். 15 ஆண்டுகளுக்குப் பின் அமரர் கருணாரட்ணம் அடிகளாரின் கல்லறைப்பகுதியில் ஒப்புக்கொடுக்கப்பட்ட இரங்கல் திருப்பலியில் அவரது சகோதரர் அருட்பணி ஞானரட்ணம் அடிகளார் யாழ். ஆயருடன் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இறுதி யுத்தத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட ஜோசப் பிரான்சிஸ் அடிகளாருக்காகவும் மன்றாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிளி பாதர் அவர்களின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன. நிகழ்வில் கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு திருகோணமலை உள்ளிட்ட பல்வேறு மறைமாவட்டங்களைச் சேர்ந்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும் அருட்பணி றேஜிஸ் அடிகள்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த முதுநிலைக் குருவான அருட்பணி மாற்கு றேஜிஸ் இராசநாயகம் அடிகளாரின் குருத்துவப் பொன் விழா நன்றித் திருப்பலியுடன் கூடிய நிகழ்வுகள் கிளாலி அதிதூதரான புனித மிக்கேல் ஆலயத்திலும், யாழ் புனித மரியன்னை பேராலயத்திலும் அண்மையில் நடைபெற்றன.

கிளாலி அதிதூதரான புனித மிக்கேல் ஆலயத்தில் கடந்த 13ம் திகதி அருட்தந்தை அவர்களின் தலைமையில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, தொடர்ந்து யூபிலி நிகழ்வுகள் இடம்பெற்றன. ☞ 02

## யாழ். மறைமாவட்டத்திற்கு புதிய குருக்கள் இருவர்



யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு திருத்தொண்டர்கள் புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள். கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்குத் திருப்பலியில் திருத்தொண்டர்களான ராஜ் டிலக்சன், ஜோண் கனிசியஸ் ஆகியோரே புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

புதிய குருக்கள் பணிவாழ்வில் அர்ப்பணிப்புடன் நிலைத்திருந்து இறை பணியாற்ற பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.

## ஈஸ்ரர் தாக்குதலின் 4ம் ஆண்டு நிறைவில் இறந்தோருக்கான வழிபாடு



இலங்கையில் 2019ம் ஆண்டு ஈஸ்டர் நாளன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 4ம் ஆண்டு நினைவு நாள். கடந்த 21ம் திகதி பல இடங்களிலும் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

யாழ் மறைமாவட்டத்தில் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளின் தலைமையில் புனித மரியன்னை பேராலயத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

1ம் குண்டு தாக்குதல் நடைபெற்ற காலை 8.42 மணிக்கு பேராலய மணிகள் ஒலிக்க விடப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பேராலய முன்றலில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் கியூடெக் இயக்குநர் அருட்தந்தை யூஜின் பிரான்சிஸ் அவர்களால் ஈகைசுடர் ஏற்றப்பட்டு வழிபாடு நடைபெற்றது. வழிபாட்டைத் தொடர்ந்து மெழுகுவர்த்திகள் தாங்கிய வண்ணம் குருக்கள், அருட்சகோதரர்கள், இறைமக்கள் அனைவரும் பவனியாக ஆலயத்திற்குள் சென்று உயிர்த்த ஆண்டவரின் திருச்சுரூபத்துக்கு முன் மெழுகுவர்த்திகளை நாட்டி அஞ்சலி செலுத்தினார்கள்.

# எமது எண்ணம்

## உள்ளக முரண்பாடுகள் தூண்டப்படும் ஆபத்துக்களைப் புரிந்துகொள்ளவும்

2022 ஏப்ரல் மாதம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிச் சூழலில் இருந்து இன்று வரை பொருளாதார நெருக்கடிகளுக்க மத்தியில் இலங்கைத்தீவு மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதை எவரும் மறந்தவிட முடியாது. அதுவும் வடக்குக் கிழக்கும் தமிழர்களின் நிலைமைதான் பாரதூரமானது. 2009 இற்குப் பின்னரான சூழலில் நிரந்த அரசியல் தீர்வுகள் எதுவுமின்றித் தற்போது இலங்கைத் தொல்லியல் திணைக்கள செயற்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தை நடத்தும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

அதாவது தமிழ்த்தேசிய அரசியல் விடுதலை என்ற பிரதான அரசியல் இலக்கு திசை திருப்பப்பட்டு வெவ்வேறு பிரச்சினைகள் அதுவும் உள்ளக முரண்பாடுகள் தூண்டி விடப்பட்டுள்ளன. எந்த ஒரு சமூகத்திலும் உள்ளக முரண்பாடுகள் உண்டு. அதுவும் அரசியல் விடுதலை வேண்டி நிற்கும் சமூகங்கள் மத்தியில் உள்ளகப் பிரச்சினைகளை மிக இலகுவாகத் தூண்டிவிடலாம்.

இவ்வாறான தூண்டுதல்களுக்கு எடுபடாமல் உறுதியாகவும், தேச விடுதலை என்ற உணர்வும் அறிவும் மாத்திரமே பிரதான இலக்கு என்ற நோக்கிலும் செயற்பட வேண்டும். இன விடுதலை வேண்டிப் போரட்டங்களில் சமய அடையாளங்கள் அவசியமற்றவை. இன விடுதலைப் போராட்டங்களில் சமய அடையாளங்கள் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

இது பற்றிய அறிவையும் உணர்வையும் ஊட்ட வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு உண்டு. ஆனாலி அந்தப் பொறுப்பில் இருந்து அவர்கள் தவறியுள்ளனர். ஆகவே சிவில் சமூக அமைப்புகள் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில், ஈழத்தமிழர்களுக்கு ஒழுங்காகக் கட்டமைக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது தமிழ்த்தேசிய அரசியல் தலைமை இல்லாமல் போனது போன்று, பிரதான சிங்கள அரசியல் கட்சிகளும் பிளவுபட்டிருந்தன. ஆனால் தற்போது பௌத்த சமயத்தை மையமாகக் கொண்ட 'இலங்கைத்தேசியம்' என்ற கட்டமைப்பைப் பாதுகாக்கும் நோக்கில் ஒன்றிணையும் முயற்சிகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2009 இறுதிப் போரின்போதும், இலங்கைத்தேசியம் என்பதைப் பாதுகாக்க கட்சி வேறுபாடுகள் இன்றி ஒன்றிணைந்தனர். 2023 இல் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள மீண்டும் ஒன்றிணைந்து செயலாற்ற முனைகின்றனர். இதன் பின்னணியில் மகாநாயக்கத் தேரர்களின் ஆசீர்வாதம் உண்டென்பது இரகசியமல்ல.

தமிழ்த்தேசியக் கட்சிகள் 2009 இற்குப் பின்னரான சூழலில் தத்தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வியூகங்களுடன், தேர்தல் கட்சிகளாக மாத்திரமே இயங்கி வருகின்றன. இதுதான் சிங்கள - தமிழ்க் கட்சிகளிடையேயான வேறுபாடு.

மலையகத் தமிழ் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் அவ்வப்போது ஆட்சியமைக்கும் சிங்கள அரசியல் கட்சிகளுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்பை ஏற்பது, அல்லது பேரம் பேசுவது போன்ற இணக்க அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது வேறு.

ஏனைய சில தமிழ்க் கட்சிகளும் அரசாங்கத்துடன் இணைந்து பயனிக்கும் அரசியலும் வேறு.

ஆனால் தமிழ்த்தேசியம் பற்றி உரத்துப் பேசுகின்ற பிரதான தமிழ்க் கட்சிகளின் அரசியல் இயங்குதளம், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு உரியதாக இல்லை என்பது இங்கே பட்டவர்த்தனமாகிறது.

இந்த நிலையில் 2020 ஏப்ரல் மாதம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிச் சூழலில் இருந்து தம்மை மீளக் கட்டியெழுப்ப முற்படும் சிங்கள அரசியல் கட்சிகள், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் 'இலங்கைத்தேசியம்' என்பதைக் கட்டியெழுப்ப வேண்டுமெனச் சிந்திக்கத் தூண்டப்பட்டுள்ளனர்.

அதாவது கட்சி முரண்பாடுகள் இருந்தாலும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இலங்கைத்தீவுப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற சிங்கள தேச அரசியல் பற்றிய 'ஞானம்' தற்போது பிறந்திருக்கிறது எனலாம்.

இப்படியான பொதுச் சிந்தனை தமிழ்த்தேசியக் கட்சிகளிடமும் வளர வேண்டும். கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால், வடக்குக் கிழக்கு மக்களின் எழுபது வருடகாலப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்கும் செயற்திட்டங்களில் ஒருமித்த குரலில் இயங்க வேண்டும். இல்லையேல் உள்ளக முரண்பாடுகள் தூண்டப்பட்டு மேலும் சிதறுண்டு போகும் ஆபத்தான நிலமைதான் உருவாகும் என்பதில் சந்தேகமேயில்லை.

இப்போது கூட அந்த ஆபத்தான கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் கொஞ்சமாவது புரிந்துகொள்ளுங்கள்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## பதுளை மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்
# அதிவண. யூட் நிஷாந்த சில்வா அடிகளார்






ஜூட் நிஷாந்த சில்வா திரு ஜோசப் சில்வா மற்றும் திருமதி ஜி மரியா பெர்னாண்டோ ஆகியோரின் மகன் ஆவார். இவர் களுத்துறை, கட்டுகுருந்த பகுதியைச் சேர்ந்தவர். அவருடைய பெற்றோர் கடவுள் பயமுள்ள, பக்தியுள்ள கத்தோலிக்கர்கள். ஜூட் நிசாந்த சில்வா குடும்பத்தில் ஆறாவது குழந்தையாக மே 5, 1970இல் பிறந்தார். எல்லாக் குழந்தைகளும் இந்தக் குடும்பத்தில் பிறந்தது ஒரு பாக்கியம் என்றும், தங்கள் வாழ்க்கையை வடிவமைத்த பெற்றோர்கள் கடவுளின் பரிசு என்றும் கருதினர். தந்தையின் முன்மாதிரியான வாழ்க்கை ஒரு வழிகாட்டும் ஒளியாக இருந்தது, அது அவரது சகோதரர்களின் அந்தந்த குடும்பங்களின் வாழ்க்கையை இன்றும் வழிநடத்துகிறது. அவர்களின் தந்தை ஆகஸ்ட் 2004இல் இறைபதம் அடைந்தார்.

ஆயர் ஆண்டகை தேர்ந்தெடுக்கப்பட்டவர் தனது ஆரம்பக் கல்வியை கட்டுகுருண்டாவில் உள்ள ரோமன் கத்தோலிக்க பள்ளியில் பயின்றார். வசதிகள் குறைவாக இருந்தபோதிலும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக, அவர் முழுமையான கல்வியைப் பெற்றார். அவர் ஒரு நல்ல மற்றும் உறுதியான கத்தோலிக்க சூழ்நிலையில் வளர்ந்ததால், அவரது இதயம் அவரை அறியாமலேயே குருத்துவத்தின்பால் ஈர்க்கப்பட்டது. கட்டுகுருந்தின் பங்குத்தந்தையாக இருந்த அருள்பணி. ஜூலியன் திசேரா அடிகள் இவரை வழிநடத்தி, 1985ஆம் ஆண்டு, கொழும்பு புனித அலோசியஸ்சிறிய குருமடத்தில் நுழைந்து தனது கனவை நனவாக்கி, தரம் 4 முதல் 11 வரை தனது கல்வியை வெற்றிகரமாக முடித்தார்.

அருட்பணி. பிளாசிடஸ் சில்வா இவரது உயர்தரப் படிப்புக்கு கணிதத்தை தேர்வு செய்ய வழிகாட்டினார், மேலும் அவர் கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் அனுமதி பெற்றார். சிறிய குருமடத்தில் இருந்ததால் கூடுதல் வகுப்புகளுக்குச் செல்ல முடியாமல் போனதால், குருமடத்தின் இயக்குனரின் சம்மதத்துடனும் வழிகாட்டுதலுடனும் அவர் வீடு திரும்பினார்.

1992ஆம் ஆண்டு தனது உயர்தரப் படிப்பை முடித்த அவர், பதுளை மறைமாவட்டத்தில் சேரும் விருப்பத்துடன் ஹப்புத்தளையில் உள்ள புனித எய்மார்ட் சிறிய குருமடத்தில் நுழைந்தார். சிலாப அருட்தந்தை. விஜித் சிறிய குருமடத்தில் இருந்ததால், மறையாசிரியர்கள் பரீட்சைகளின் 1, 2 மற்றும் 3வது பகுதிகளை முடிக்க கொழும்பின் அருள்பணி. ஜசிங் அடிகளார் உதவினார். ஆங்கில மொழியிலும் சிறந்து விளங்கிய அவர் 1994ஆம் ஆண்டு களுத்துறையில் உள்ள தஹம் செவெனா - இடைநிலை குருமடத்தில் நுழைந்தார். தஹாம் செவேனாவில், அவர் அருள்தந்தையர்களின் திறமையான வழிகாட்டுதலின் கீழ் வந்தார். பிரான்சிஸ் சேனநாயக்க மற்றும் அதே ஆண்டில் அம்பிட்டிய தேசிய குருமடத்தில் நுழைந்தார். மன்னார் ஆயர் மேதகு. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மேரியஸ் பீரிஸ் ஆண்டகை மற்றும் மேதகு.வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை ஆகியோர் பெரிய குருமடத்தின் இயக்குனர்களாக இருந்தபோது, அருள்பணி. நிசாந்த சில்வா அடிகளார் ஒரு மாணவராக இருந்தார். இந்த மூன்று ஆயர்களின் சிறகுகளின் கீழ் அவர் பெற்ற பயிற்சி, குருத்துவத்திற்கான அவரது வாழ்க்கையிலும், பின்னர் அவரது குரு வாழ்க்கையிலும் பெரும் உதவியாகவும் ஆதரவாகவும் இருந்தது. பெரிய குருமடத்தில் அவர் படித்த பாடங்கள் தத்துவம், இறையியல் மற்றும் குழு செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகள் அவரது அறிவை மேம்படுத்தவும், ஒருவரின் சுயாதீனத்தை நெறிப்படுத்தவும், தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தவும் பெரிதும் உதவியது.

ஒரு சகோதரராக அவர் வெல்லவாயவில் பணியாற்றினார் தெஹியத்தகண்டிய, மற்றும் மறை மாவட்டத்தில் உள்ள பல தேவாலய அடிப்படையிலான நிறுவனங்களுடன் அறிவைப் பெற்றார் மற்றும் தோட்டத் துறையில் கல்லுவா, மடோல்சிமாவின் அடாத்த மற்றும் லுனுகல. அவர் மேய்ச்சல் அனுபவத்தைப் பெறுவதற்காக பசறை பங்கில் இருந்தார். மன்னாரில் உள்ள பள்ளிமுனை ஊராட்சியில் பணியாற்றியதன் மூலம் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றார்.

அருடபணி. ஜூட் நிஷாந்த சில்வா அடிகளார் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது தியாக்கோன் பட்டத்தைப் பெற்று, பெரிய குருமடத்தில் குருத்துவப் படிப்பை முடித்து ஜூலை மாதம் பதுளை மறைமாவட்டத்திற்கு வந்தார். அவர் தனது சொந்த ஊரான கட்டுகுருந்தா புனித பிலிப் நேரி தேவாலயத்தில் அவரது திருவருளால் அக்டோபர் மாதம் குருவானவர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். பதுளை மறை மாவட்ட ஆயர் மேதகு. வின்ஸ்டன் பெர்னாண்டோ ஆண்டகை

அவர் தியத்தலாவையில் தனது குருவாக பணியாற்றத் தொடங்கினார், மேலும் பெரிய குருமடத்தில் இயக்குனருக்கு உதவினார். பின்னர் அவர் தனது படிப்பைத் தொடர உரோமில் உள்ள பொன்டிஃபிகல் அர்பன் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டார். கேனான் சட்டத்தில் தனது படிப்பை முடித்த அவர், நாடு திரும்பி

னார், திருமண விவகாரத்தில் பணிபுரிந்த அனுபவத்தைப் பெற சிலாபம் அனுப்பப்பட்டார். எட்டு மாதங்கள் அங்கேயே இருந்தார்.

2010ஆம் ஆண்டு, பதுளை மறைமாவட்டத்தின்திருமணவிவகார பணிப்பாளராக கடமையாற்றிய தோடு, பிபிலை மற்றும் பதுளை பேராலயத்தில் உதவி குருவாகவும் பணியாற்றினார். 2016ஆம் ஆண்டில், அவர் அகில இலங்கை சமாதான நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

ஜனவரி 30ஆம் திகதி, இந்த ஆண்டு (2023 ஆம் ஆண்டு) பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பதுளை மறைமாவட்டத்தின் நான்காவது ஆயராக ஜூட் நிஷாந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் வரை அவர் உஸ்கொட நிறுவனத்தின் விவகாரங்களை இயக்கும் இயக்குநராக இருந்தார்.

கடவுள் நம் அனைவரையும் வழிநடத்துகிறார், பயிற்றுவிப்பார், ஆசீர்வதிக்கிறார் என்று ஆயராக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிவண. ஜூட் நிஷாத சில்வா அடிகளாரை உறுதியாக வழிநடத்துவார் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

**ஜூட் நிஷாந்த சில்வா அடிகளார் மீது இறைவனின் அருளும் ஆசீரும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.**

# வத்திக்கான் செய்திகள்

# திருஅவையும் திருத்தந்தையும்



## சிகிச்சை முடிந்து உடல் நலத்துடன் இல்லம் திரும்பிய திருத்தந்தை

மார்ச் 29, புதன்கிழமை சுவாசத் தொற்றுநோய் காரணமாக உரோமில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்ரல் 1, சனிக்கிழமை காலை சிகிச்சை முடிந்து நல்ல உடல்நலத்துடன் வத்திக்கானின் சாந்தா மார்த்தா இல்லத்திற்குத் திரும்பினார்.

ஏப்ரல் 1, சனிக்கிழமை காலை, ஜெமெல்லி மருத்துவமனையை விட்டுக் கிளம்பும் முன் அங்குள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்திற்குத் திரும்பும் முன் உரோம் நகர் பாதுகாவலியான தூய மரியன்னை பெருங்கோவிலுக்குச் சென்று அன்னை மரியாவிற்குத் தனது நன்றியினையும் தெரிவித்தார்,

திருத்தந்தை மருத்துவமனையில் இருந்தபோது தனக்காகவும் தன்னுடைய உடல் நலனுக்காகவும் செபித்த அனைவருக்கும் தன் நன்றியினையும் மருத்துவ மனைப் பணியாளர்களின் தியாகம் நிறைந்த பணிகளுக்காகப் பாராட்டுகளையும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்,

தாம் இல்லம் திரும்புவதற்கு முன்பு, புற்றுநோயியல் பிரிவில் சிகிச்சை பெற்று மார்ச் 31. இரவு உயிரிழந்த சிறுமி ஆஞ்சலிக்காவின் பெற்றோரை அரவணைத்து ஆறுதல் கூறி, அச்சிறுமியின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மனமுருகிச் செபித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**குருத்து ஞாயிறு** ஏப்ரல் 2 ஞாயிற்றுக்கிழமை தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் நடைபெற்ற குருத்து ஞாயிறு திருப்பலியை திருத்தந்தை பிரான்சிஸ் தலைமையேற்று வழிநடத்தினார். அன்று வழக்கம்போல் மூவேளை செப உரையை வழங்கித் தம் ஆசீரையும் அளித்தார்.

**பெரிய வியாழன்** ஏப்ரல் 6 ஆம் திகதி நடைபெற்ற புனித வியாழன் திருப்பலியை உரோமையில் உள்ள காஸால் டெல் மார்மோ என்னும் இளையோர் சிறையில் நிறைவேற்றினார். 2013 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி. புனித வியாழனன்று இதே இளையோர் சிறையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பாதங்களைக் கழுவித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

## மக்களை நிராகரிக்கும் உலகில் அமைதிக்கு வழியில்லை

அதிகாரம், கலாசாரம் மற்றும் அரசியல் ஊடுருவல் வழியாக மக்களை அடிபணியச் செய்வதும் சுரண்டுவதும் ஒரு குற்றமாகும் என்றும், மக்களை ஒடுக்கும் மற்றும் நிராகரிக்கும் உலகில் அமைதிக்கான சாத்தியம் இல்லை என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் 30, 31 ஆகிய நாட்களில் வத்திக்கானின் பியோ நான்காம் அரங்கத்தில் திருப்பீட சமூக அறிவியல் பல்கலைக் கழகத்தார் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் பங்கேற்றவர்களுக்கு அனுப்பிய செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். பொருளாதார மற்றும் கருத்தியல் காரணங்களுக்காக மக்கள் சுரண்டப்படுவதையும் ஓரங்கட்டப் படுவதையும் கண்டித்துள்ளார்.

இன்றைய உலகின் தந்திரமான நவீன காலனித்துவம் ஒரு குற்றம் என்றும், அது அமைதிக்குத் தடையாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

அமெரிக்கா மற்றும் ஆபிரிக்காவில் பல்வேறு அரசியல் ஆதிக்கச் செயல் முறைகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்களித்த சில நம்பிக்கையாளர்களின் செயல்களுக்காக மன்னிப்பையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

“காலனித்துவம், மறுகாலனித்துவம் மற்றும் புதிய காலனித்துவம்: சமூக நீதி மற்றும் பொது நன்மையின் ஒரு முன்னோக்கு” என்ற தலைப்பில் நடைபெற்ற கூட்டமானது, திருப்பீடத்தின் சமூக அறிவியலுக்கான பலகலைக்கழகம், சமூக உரிமைகள் மற்றும் பிரான்சிஸ்கன் கோட்பாடு குறித்த நீதிபதிகளின் குழு மற்றும் மாசசூசெட்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றால் நடத்தப்பட்டது.

## உலக ஆயர்கள் மாமன்றத்தின் இரண்டாம் கட்டம் நிறைவு

2023 மார்ச் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன், கண்டங்களவில் நடந்த, சினோடல் என்னும் கூட்டியக்கத் திருஅவைக்கான செயற்பாடுகள் நிறைவுற்றிருக்கிறது. ஆனால் இறைமக்களுடனான உரையாடல் இன்னும் முடிவடையவில்லை என்றும், ஏப்ரல் 1 ஆம் திகதி அனைத்துலக ஆயர்கள் பேரவையின் தலைமைச் செயலகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கண்டங்களளவில் நடைபெற்ற அனைத்துக் கூட்டங்களும் கிறிஸ்துவுடன் ஒற்றுமையாக நடப்பதன் வழியாகப் புதுப்பித்தலுக்கான பெரும் விருப்பத்தை வலியுறுத்தியுள்ளன என்றும் தெரிவித்துள்ளது.

கூட்டியக்கப் பயணச் செயற்பாடுகள் ஆழமான மகிழ்ச்சியையும் நம்பிக்கையுள்ள மக்களின் அன்பையும் வெளிப்படுத்தியுள்ளன என்று குறிப்பிட்டுள்ள அவ்வறிக்கையில், இறைமக்கள் ஆலயம் என்பது செவிமடுக்கும் ஒரு கருவியாகவும், திருஅவை வாழ்க்கையின் நிரந்தர இயக்கமாகவும் இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருமித்த கருத்தை அடைதல், உண்மையாகக் கேட்டல், சமூகப் பகுத்தறிவை வளர்த்தல் போன்ற வற்றிற்கு “ஆன்மீக உரையாடல்” முறையைத் தேர்ந்தெடுப்பதற்கான திருஅவை முடிவையும் இக்கூட்டங்கள் உறுதிப்படுத்தியுள்ளன என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பணியில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்ட அனைவருக்கும் ஆயர்கள் பேரவையின் தலைமைச் செயலகம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது என்றும், குறிப்பிட்ட தலத்திருஅவைகள் மற்றும் உலகளாவிய தலத்திருஅவைகளுக்கு இடையேயான உரையாடலை வலுப்படுத்தி, ஒற்றுமையாக ஒன்றிணைந்து நடப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றிய அதிக விழிப்புணர்வுக்கு இக்கூட்டங்கள் வழிவகுத்துள்ளன என்றும் அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

ஏழு கண்டத்தில் நடைபெற்ற கூட்டங்கள், செவிமடுத்தல் மற்றும் பகுத்தறிதலுக்கான ஓர் உண்மையான செயல்முறையாக இருந்தன என்றும், ஒன்றிணைந்து நடப்பது எப்படி என்பதையும், ஒப்படைக்கப்பட்ட பணிக்கு ஏற்ப நற்செய்தியை அறிவிப்பது எப்படி என்பதையும் திருஅவை மக்களுக்கு வெளிப்படுத்திப் பல்வேறு வகைகளில் உதவுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மருத்துவமனையில் குழந்தைக்கு திருமுழுக்கு கொடுத்த திருத்தந்தை

ஜெமெல்லி மருத்துவமனையின் புற்றுநோய்பிரிவிலுள்ளகுழந்தைகளைச்சந்தித்துப் புதிதாகப் பிறந்த குழந்தை ஒன்றுக்குத் திருமுழுக்கு அருட்சாதனத்தையும், உயிர்ப்புப் பெருவிழாவிற்கான புனிதப் பொருட்களையும் திருத்தந்தைபிரான்சிஸ்கொடுத்துமகிழ்ந்தார். மார்ச் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை செபமாலைகள், இனிப்புகள், இயேசுவின் பிறப்புப் பற்றிய புத்தகம் ஆகியவற்றை அங்குள்ள குழந்தைகளுக்குக் கொடுத்து மகிழ்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிறந்து சில வாரங்களே ஆன “மிகுவேல் ஏஞ்சல்” என்னும் குழந்தைக்குத் திருமுழுக்கு அருளடையாளத்தையும் அளித்து ஆசீர்வதித்தார்.

புற்றுநோயியல் பிரிவில் உள்ள குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோரையும் சந்தித்து ஆறுதலானவார்த்தைகளையும் பகிர்ந்து கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மருத்துவமனையில் பணியாற்றும் பணியாளர்களின் தியாகம் பணியார்வம் போன்றவற்றைக் குறித்து அவர்களை வாழ்த்தி நன்றியினைத் தெரிவித்து, கிறிஸ்துவின் சிலுவைக்கு சாட்சியாக இருங்கள் என்றும்அவர்களைக்கேட்டுக் கொண்டார்.

வண்ணங்கள். பூசப்பட்ட சுவர்கள் மற்றும் பொம்மைகளின் மகிழ்ச்சியால் வரவேற்கும் ஆழமான வலி நிறைந்த புற்றுநோயியல் மற்றும் குழந்தை நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவுக் குழந்தைகளைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செபமாலைகள், உயிர்ப்பை அடையாளப்படுத்தும் முட்டை வடிவ இனிப்புகள். இயேசுவின் பிறப்புப் பற்றிய புத்தகம் போன்றவற்றையும் அவர்களுக்கு வழங்கி மகிழ்ந்தார்.

மேலும், ஜெமெல்லி மருத்துவமனையில் உள்ள புற்றுநோயியல் பிரிவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது



வருகையைப் பதிவு செய்வதன் அடையாளமாக வருகையின் முடிவில், ஒரு வெற்றுத்தாளில் சிறு செபத்தையும் கையெழுத்தையும் பதிவிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2021 ஆம் ஆண்டில் ஏற்கனவே இம்மருத்துவமனையில் பெருங்குடல் அறுவை சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டிருந்த போதும் இப்பிரிவில் இருந்த குழந்தைகளைச் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது..

## துயரத்தின் வேளையிலும் இறைத்தந்தையுடன் ஒன்றித்திருந்தார் இயேசு

ஆண்டவராம் இயேசு, நம் உடலின் கல்லான இதயங்களை சதையாலான இதயங்களாக மாற்றுகிறார் என்று ஏப்ரல் 2 ஆம் திகதி, ஞாயிறன்று நடைபெற்ற குருத்து ஞாயிறுத் திருப்பலியில் வழங்கிய மறையுரையில் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைத்தந்தை தன்னைக் காப்பாற்றுவார் என்று நன்றாக அறிந்திருந்தால் அந்தத் துயரத்தின் தருணத்திலும் இயேசு தன்னை முழுவதும் இறைத்தந்தையிடம் கையளித்தார் என்றும் தெரிவித்தார்.

புனித மத்தேயு நற்செய்தியில் இயேசு கூறும், “என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்ற வார்த்தைகள் கிறிஸ்துவின் பாடுகளின் இதயத்திற்கும், நமது மீட்பிற்காக, அவர் அனுபவித்த துன்பங்களின் உச்சத்திற்கும் நம்மைக் கொண்டு செல்கின்றன என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைத்தார்.

இயேசு அனுபவித்த துன்பங்கள் ஏராளம் என்றும், அவரது பாடுகளின் துயரங்களைக் கேட்கும் போதெல்லாம். அவை நம் இதயங்களைத் துளைக்கின்றன என்றும் இவை உடலின் துன்பங்கள் மட்டுமல்லாது மாறாக, ஆன்மாவின் துன்பங்கள் என்றும் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். இவை அத்தனை துயரங்களிலும் நிச்சயமாக, அவர் இறைத்தந்தையுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார் என்றும் விளக்கினார்.

இயேசு நம்முடன் முழுமையாகவும் உறுதியாகவும் ஒன்றித்திருப்பதற்காக, இறுதிவரை நம்மில் ஒருவராக வாழ்ந்தார் என்றும், அதனால் நம்மில் யாரும் தனிமையாகவோ, நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு இருப்பதாகவோ உணரக்கூடாது என்றும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் எப்போதும் விரக்திக்கு இரையாகிவிடக்கூடாது என்பதற்காகவும், அவர் எப்போதும் நம் அருகில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அவர் கைவிடப்பட்டதொரு நிலையை அனுபவித்தார் என்றும் கூறினார்.

இப்படிப்பட்ட கைவிடப்படும் நிலைகளில்தான் இறைவன் நம்மைக் காப்பாற்றுகிறார் என்றும், சிலுவையில், முழுவதுமாகக் கைவிடப்பட்டதாக உணர்ந்தபோதும், இயேசு விரக்திக்கு அடிபணியாமல், இறைவேண்டல் செய்து, நம்பிக்கையுடன், இறைத்தந்தையின் கரங்களில் தன்னை ஒப்புக்கொடுத்தார் என்றும் கூறினார்.

புறந்தள்ளப்பட்டவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும் கிறிஸ்துவின் உயிருள்ள அடையாளங்களாக இருக்கின்றனர்என்றும், அவர்கள் கிறிஸ்துவினுடைய அன்பையும், தனிமையில் இருந்து நம்மை விடுவிக்கும் அவரது விடுதலையையும் நமக்கு நினைவுபடுத்துகின்றனர் என்பதையும் நினைவில் கொள்ளுமாறும் திருத்தந்தை பிரான் சிஸ் கேட்டுக்கொண்டார். கைவிடப்பட்ட நிலையில் உள்ள இயேசுவிடம் அன்பு கூர்வதுடன், நம்மைச் சுற்றிலுமுள்ள கைவிடப்பட்டவர்களிடம் இயேசுவைக் கண்டு அவர்களிடத்திலும் அன்பு கூர்வோம் என்றும், அப்போதுதான் நமக்காகத் தன்னையே முழுவதுமாக வெறுமையாக்கிய இயேசுவுடன் ஒரே எண்ணமும் ஒரே உள்ளமும் கொண்டவர்களாக இணைந்திருப்போம் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

# உள்ளுணர்வுச் சக்திகள்

**அருட்பணி வின்சன் பற்றிக்**

மனிதன் புரிந்துகொள்ள முடியாத ஒரு விசித்திரப் படைப்பு என்றால் யாரும் மறுக்கமாட்டார். இருதயத்தையும்பரிமாற்றம்செய்யக்கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ச்சியுற்றாலும், நுண் கருவிகளைக் கண்டுபிடித்து மனிதனையே வியப்புற வைக்கும் விதமாக நுட்பக்கலை ஓங்கினாலும், மனிதன் என்றும் ஒரு விசித்திரப் படைப்பு என்றே நிரூபித்துக்கொண்டு போகின்றான்.

உள்ளத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் விதிகளை முற்றாகப் புரிந்து கொள்ளமுடியாதவனாய் அவன் காணப்படுகிறான். பூகோளத்தில் வியாபித்துக் கிடக்கும் சக்திகள் பூகம்பங்களாக, இடி முழக்கங்களாக பல வடிவங்களில் தோன்றுவதைப் போல மனிதனின் உடலில் வியாபித்துக் கிடக்கும் உளச் சக்தி ஒருங்கிணைந்து பல வடிவங்களில், பல விளைவுகளை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக ஒருவர் பல முள்ளவராக பாரியவேலைகளையும் அதிசயிக்கக் கூடிய முறையில் செய்வார். யானையைக் கூட கட்டும் சங்கிலியைக்கைகளால் சுக்கு நூறாக்குவார். புவியீர்ப்பை எதிர்த்து அந்தரத்தில் உலாவுவார்.

உளச் சக்தி எல்லோரிடமும் இருப்பினும் அது விஷேட முறையில் வெளிப்படுவது ஒரு சிலரிடமே. சிலருக்கு இச்சக்திகள் இயற்கைக் கொடைகள் அல்லது வரம் எனலாம். இன்னும் சிலருக்கு நெறிப்படுத்தப்பட்ட வாழ்வால் சாதித்த சாதனையாகலாம். வேறு சிலருக்கு மனோவசியம் உணர்ச்சிகளின் மூலம்விளைந்தவை எனலாம்.

ஆனால் இவ் உளச் சக்திகளை நெறிப்படுத்தி, பயன்படுத்தும்போது எமது வாழ்க்கை நிறைவுபடுத்தப்படும்; வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும். "ஒரே வேலை, ஒரேகளை" இது ஒரு சிலரது நிரந்தர முறைப்பாடு. இத்தகைய பேச்சு அவர்களது உளப்போக்கிலுள்ள குறைபாட்டையே எடுத்துக் காட்டுகின்றது. இது பெரும் உடல்நோய்களின் முதற் தோற்றமாகவோ அல்லது உள்ளத்து எழுச்சிகளை அடக்குதலின் அறி குறியாகவோ காணப்படலாம் என்றும் சக்தி சரிசமப்படுத்தப்படாமையே இதன் காரணமாக அமையலாம் என்றும் வோல்ர்ர் ஈ ஓ டொனல் கருதுகின்றார்.

உடற்பாங்காகவும் உள்ளத்துச் சார்பாகவும் சக்தியில் நிலைத்திருக்க, போதியளவு நேரமும், சிந்தனையும் சக்தி சமப்படுத்துவதில் செலவிடப்படுவது அவசியம். ஒவ்வொருவனும் தன் வாழ்வில் எப்பகுதிகளில், எவ்வெவ் வீதங்களில் சக்தி விரயமாகின்றது என்பதைக் கணிப்பிட வேண்டும். அநேகமான சந்தர்ப்பங்களில் உடற் காரணிகளை விட உள்ளத்துக் காரணிகளே கூடுதலாகத் தொழிற்படுகின்றன.

உதாரணமாக, எழுதுவினைஞன் ஒருவன் தன் வேலையின் பெரும்பகுதியை இருந்து கொண்டே செய்கின்றான். இடைவேளையின் போதே அவன் தலையிடியால் வருந்துவான், இத்தகைய சமச்சீரற்றசக்தி நிலை.

1.தேவையான சக்தியைக் கூட்டுவதன் மூலம்,

2. நாளாந்த ஒதுங்கி வாழுதலைக் கூட்டுவதன் மூலம் திருத்தப்படலாம்.



**சக்தி உருவாகும் முறைகளை ஆராய்வோம்**

**1). உண்ணுதல் :** காலையில் வெறும் கோப்பியுடனும் மதியத்தில் குளிர்பானத்துடனும் காலம் கழிப்பவன் சோர்வுற்றே காணப்படுவான். அதேவேளை, அதிகப்படியாக உண்பவன் சோம்பல் தனத்துக்கு ஆளாவான். நாள் முழுவதும் சக்தி மட்டத்தை உயர் நிலையில் வைத்திருக்க புரதச்சத்து நிறைந்த காலை ஆகாரத்துடன் நாளை ஆரம்பியுங்கள். மதிய உணவில்கீரையைச் சேர்த்துக் கொள்ளுங்கள்; போதியளவு தண்ணீர்குடியுங்கள்.

**2). உறங்குதல் :** இரவில் ஆழ்ந்த நித்திரை கொள்ளாதவர்கள் பகலில் முழு உற்சாகத்துடன் காணப்பட மாட்டார்கள்.

நித்திரை மாத்திரைகளும் (Sleeping pills) போதை மருந்துகளும் (Drugs) பிரச்சினையைத் தீர்க்க, அவை நீண்ட காலகட்டத்தில்பிரச்சினையைத் தீவிரமாக்கும். நித்திரையின்மையை முறியடிப்பதற்கு ஒரே ஒரு வழி அதன் அடிப்படைக் காரணிகளைக் கண்டு கொள்ளலே. பல சந்தர்ப்பங்களில் இவைமனநிலை சார்ந்தவையாய் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் போதியளவு உடற் பயிற்சியின்மை நித்திரையின்மையைத்தோற்றுவிக்கலாம்.

**3). உடற்பயிற்சி :** மிகவும் முக்கியமானதும் இலகுவில் கிடைக்கக்கூடியதுமான உளச்சக்திச் சாதனம் (Source of Psychic Energy) உடற் பயிற்சியேயாகும். உடற்பயிற்சி மனச் சோர்வினைக் களைகின்றது. உறங்குதலின் தரத்தை உயர்த்துகின்றது. எவை உடற் பயிற்சிகள்? வியர்க்கச்செய்து, இதயம், சுவாச வீதம் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடுகள் அனைத்தும் உடற் பயிற்சிகளே. நீந்துதல், நடத்தல், ஓடுதல் போன்றன அவற்றில் சிலவாகும். எந்தவொரு உடற்பயிற்சியைத் தன்னும் செய்யும் முன்னர்பின்வருவனவற்றை நினைவு கூருங்கள்"

1. முழுமையானஉடற்பயிற்சி செய்தல்.
2. மெதுவாக ஆரம்பித்தல்.
3. ஒழுங்குக் கிரமமாகச் செய்தல்.

இவற்றிற்கு முரணான உடற் பயிற்சிகள் சிலவேளைகளில் ஆபத்தானவையாக மாறலாம்.

4). இடைவேளை : எந்த ஒரு செயற்பாட்டிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டிருப்பதைத் தவிருங்கள். இடையிடையே ஒரு சிலநிமிடங்கள் ஓய்வு எடுப்பதன் மூலம் சக்தியைச் சேமியுங்கள்.

சதாவேலை, அலைச்சல் போன்றவற்றை முறியடியுங்கள். அத்தோடு ஒரே மாதிரியான வேலையைச் செய்வதன் மூலம் ஏற்பட்ட சலிப்பிலிருந்து விடுபட விடுமுறை நாட்களைச் சக்திச் சேமிப்பு நாட்களாகப் பயன்படுத்துங்கள். அதாவது உங்கள் செயற்பாடுகளில் திசை திருப்பத் திறனை இடையிடையே மேற் கொள்வது உற்சாகத்தையளிக்கும்.

"உங்களிடம் எது உள்ளதோ அவை எல்லாவற்றையும் பயன்படுத்துங்கள்; இல்லையேல் பறிகொடுத்து விடுங்கள்" ஹென்றிபோர்ட். ஒவ்வொருவரும் தன்னிடமுள்ள சக்தியை சமச்சீரான முறையில் பயன்படுத்துவதன் மூலமே தன்னிறைவு பெறலாம். எனவே, பின்வருவனவற்றைக் கவனியுங்கள்.

◆ முக்கியமானதற்குமுதலிடம் கொடுங்கள்.

◆முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

◆ உங்கள்சிந்தனையை, செயற்திறன்களை ஒருமுகப்படுத்துங்கள். உங்கள் விருப்பம் சார்ந்த துறைகளில் ஈடுபாட்டைக் கூட்டுங்கள்.

◆ சக்தி தேவையில்லாது வீணாவதைத் தவிருங்கள்.

அநேகமானோர், உள்ளனவற்றை உள்ளபடியே ஏற்க மறுப்பதால் சக்தியை வீணாக்குகின்றார்கள். பருவ மங்கைதான் தொடர்ந்து சிறுமியாய் இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறாள்.

இவை இறந்த காலத்தை சார்ந்தவை. இறந்த கால சம்பவங்கள் அன்றேல் அவற்றின் மாறுதல்கள் மீண்டும் நிகழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது. *(தொடரும்...)*



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

**யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்**
**ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.**

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அநுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்காலம்)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

(சென்றவாரத் தொடர்ச்சி)

## கிறிஸ்தவரல்லாதோருடன் உறவு

கத்தோலிக்கம் ஒற்றுமையின் மதம் ஆங்கிலேய ஆட்சியின் போதும் இலங்கைத்தீவில் காலனித்துவ ஆட்சி அகன்ற பின் ஏறக்குறைய ஒரு தசாப்த காலமாகவும் வட-தென் இலங்கையின் தமிழ்-சிங்கள மக்களின் உறவிற்குப் பல தமிழ் அரசியல் தலைவர்கள் பணியாற்றியிருக்கின்றனர். இவ்வுறவு 1958இல் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட வேளை தொடக்கம் அவ்வுறவை மீண்டும் சீர்செய்யப் பல சமயத் தலைவர்களும் பெரும்பங்காற்றினர். இவரது பங்கு அளவிடற்கரியது. அரசுத் தலைவர்கள் மத்தியில் செல்வாக்குடன் இருந்தாலும், தனது கையாலாகாத் தன்மையை மாபெரும் ஏமாற்றத்துடன் இவர் உணர்ந்த இக்காலத்தில், தற்காலிகமாகவும் உடனடி உதவியாகவும், உடைமைகள், உறவுகளை இழந்து, பயந்தோடும், அச்ச நடுக்கத்தோடும், எதிர்கால வாழ்வாதாரம் எதுவுமின்றித் தவித்திருந்த மக்களின் ஆறுதலுக்காக அவர்களை தமிழ் பிரதேசமாகிய யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளுக்குக் கொண்டு வந்தவர் இவரே (பாதிக்கப்பட்ட மக்களைக் காங்கேசன்துறைக்குக் கொண்டு வர பல அரசியல் தலைவர்களைத் தொடர்பு கொண்டு உடனடியாகக் கப்பல் சேவைகளைச் செய்தவர் இவரே). இது ஒரு தற்காலிகத் தீர்வே. தூரநோக்கிப் பார்க்கும் திறமை மிக்க இவர், இன்று தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற அவலத்தை அன்று அறியமுடியவில்லையா என்று பலர் குறை கூறலாம். அறிந்திருந்தாராயினும், அன்றைய பின்னணியில் வைத்து நாம் இதை நோக்க வேண்டும். நாட்டின் காலனித்துவ ஆட்சி வெளியேற்றத்திற்காக 1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயகா 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொண்டு வரும் வரையும், ஒரணியில் தோளோடு தோள் நின்ற தமிழ்த் தலைவர்களோடு (1956இல் முரண்படும் வரை) ஒன்றிணைந்து, வட-தென், சிங்கள-தமிழ் ஒற்றுமைக்காக இவர் பாடுபட்டமை ஏற்கெனவே இரு இனங்களின் மனநிலை மற்றும் ஆளுமை உறவின் சங்கமத்தின் குழந்தையாகவே இவர் உருவாக்கப்பட்டிருந்தமையையும், கத்தோலிக்கம் பிரிவினையை அல்ல ஒற்றுமையை வலியுறுத்தும் மதம் என்பதற்கு சாட்சி பகர்வதாக இவர் திகழ வேண்டியிருந்தமையையும் எடுத்துக்காட்டியது. எனவே தான், மடுத்திருப்பதியில் முன்னேற்றங்கள் இந்த வகையிலேயே வட-தென் இலங்கையின் உறவுப்பாலமாக, இரு இனங்களும் சங்கமிக்கும் ஓர் அமைதியான இடமாக இத்திருப்பதியை உரு வாக்க வேண்டிய முன்னுரிமைத் தேவை இவருக்கு வலுவாக இருந்தது. இனச்சங்கமம் மட்டுமல்ல, கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்களும் விசேடமாக, இந்து, முஸ்லிம், பௌத்த மதங்களின் சங்கமமாகவும் அவர்கள் பகரும்சாட்சியங்களின் மையமாகவும் மடுத்திருப்பதி விளங்கியமையால் ஒலி, ஒளி, நீர், வீடமைப்பு வசதிகளை இவர் சிங்கள மற்றும் கொழும்பு, நீர்கொழும்புத் தமிழ் மக்களின் நிதியுதவியைக் கொண்டும் அமைத்தார். இந்த அன்பளிப்புகளால் பழைய வீடுகள் புனரமைக்கப்பட்டும், புதியவைகள் கட்டப்பட்டும், பாரிய மின்பிறப்பாக்கிகள் மூலம் ஒளியூட்டப்பட்டும், ஒலிபெருக்கி வசதிகள் செய்யப்பட்டும், ஆலய முன் போட்டிகோ மண்டபம் அழகுபடுத்தப்பட்டும், நிலப்பகுதி சலவைக்கல் பதிக்கப்பட்டும், கூரையின் உட்பகுதிக்குத் தகட்டு சீர் அடிக்கப்பட்டும் புனரமைப்புச் செய்யப்பட்டது.

தெருக்கள் ஆழப்படுத்தப்பட்டுக் குடிநீர்க் கிணறுகள் புதிதாகத் தோண்டப்பட்டு, பழையவை மறுசீரமைக்கப்பட்டுக் குழாய்நீர் வசதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டது (மடுத்திருப்பதியின் நாட்

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

குறிப்பேடு பக். 38-70). அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய கடைகள் மடுறோட்டுக்கு மாற்றப்பட்டன.

கிணறுகளில் குளிப்பது தடைசெய்யப்பட்டுக் குளம் ஆழப்படுத்தப்பட்டு, குளத்தின் அருகில் குளிக்கும் தொட்டிகள் புனரமைக்கப்பட்டு குழாய் வசதிகள் செய்யப்பட்டன. சுயநல நோக்கங்களை மனதிற் கொண்டு, வேறு சிறிய உதவியற்ற ஆலயங்களுக்கு நிதி சேகரிப்போர் தடைசெய்யப்பட்டு, மலிந்திருந்த ஊழல்கள் ஒழிக்கப்பட்டன. முகாம் காவலிலும், கேளிக்கை களியாட்டங்களைத் தடை செய்வதிலும், களவுகளைத் தடைசெய்வதிலும், பொது நிலைத் தொண்டர்களின் உதவியுடன் அருட்பணியாளர்களால் கூடிய அக்கறை காட்டப்பட்டது. ஏற்கெனவே இருந்த புகையிரத, பேருந்து, தனியார் வாகனப் போக்குவரத்து, பொலிஸ், சுகாதார சேவைகளில், மன்னார் அரச அதிபர்கள் இவருடன் ஒத்துழைத்தனர். இத்தலத்தின் சிறப்பை உயர்த்தவும் மக்களுக்கு உணர்த்தவும் பலர் இவருக்குப் பக்கபலமாக இருந்தனர். *(தொடரும்...)*

# நற்செய்திப் போராளி
# புனித பவுல்

பவுல் மட்டுமல்ல: மாறாக. பவுலின் எழுத்துகளும் வியப்பானவை. புதிய ஏற்பாட்டில் இதற்கான தரவுகளை நாம் பார்க்கின்றோம். பேதுரு எழுதிய இரண்டாம் திருமடலில், பவுலுடைய இறையியல் தவறாகப் புரிந்து கொள்ளப் படும் என்கிற அச்சத்தைப் பேதுரு பதிவு செய்கின்றார் (2 பேது 3:15- 16). எனினும், பவுலின் இறையியலும். இறை நம்பிக்கையும் அவருடைய இறைஎண்ண அலைகளும் தொடக்க காலத் திருஅவையைப் பாதித்தன. தொடக்ககால திருஅவைக்குப் பவுலின் இறையியல் உரமிட்டது.

உருக்கொடுத்தது, உயர்த்தியது, ஓங்கி ஒலித்தது என்பது கண்கூடு. திருத்தூதர் பவுல் சொன்ன 'உடலில் தைத்த முள்' எனும் கூற்று ஆழ்ந்த இறையியல் நோக்கமும், மானுடவி யல் பார்வையும், பணிவாழ்வின் பளுவையும் உளவியல் ஏக்கங்களை யும் அருள் வாழ்வின் ஆதங்கங் களையும் கொண்டிருக்கின்றது என்ற எண்ணம் அதைப் பற்றிய ஆய்வுக்கு நம்மை இட்டுச் செல்கிறது.

விவிலியப் பாடங்களில் புரிந்து கொள்வதற்குச் சற்றுக் கடின மான பகுதிகளில் ஒன்று. 2 கொரிந்தி யர் 12:7-9 (“உடலில் தைத்த முள்”) என்னும் பாடமாகும். திருஅவைத் தந்தையர்களும் அருள் வாழ்வு நெறியாளர்களும் விவிலியப் பொருள் கோளியல் அறிஞர்களும் பல்வேறு சொல்லாய்வு விளக்கங்களையும், புரிதல்களையும் வடித்திருக்கின்றார் கள். இந்த விவிலியப் பகுதியில் ஆய்வுசெய்வது விவிலிய உலகிற்குப் புதிதான ஒன்றல்ல ஆனால், இந்த விவிலியப்பாடத்தை விமர்சனக் கண் ணோட்டத்தோடு ஒரு சூழமைவு வாசிப்பு செய்யும்போது, பவுலின் இந்தச் சொல்லாடல் ஆழம் பெறுகி றது, அர்த்தம் பெறுகிறது.

பவுல் தன் பணி வாழ்வின் உச்சத் தில், தன் பணியில் இன்னலுற்றார் என்பதையும், அவருடைய மனப் போராட்டமும். உடல் வலுக்குறை வும் தான் ஏற்படுத்திய திருஅவைக ளில் இருந்த பிளவுகளும் போராட்டங் களும் அவருக்கு மிகுந்த வலியைத் தந்தன என்பதும் உண்மை. ஆய னின் மேய்ப்புப் பணியில், ஒரு திருத் தூதரின் நற்செய்திப் பணியில், ஒரு பணியாளரின் அருட்பணிகளில் வருகின்ற துன்பங்கள், போராட்டங் கள், சவால்கள் தான் இந்த முள்ளாக இருக்குமோ?

'உடல்' என்ற பதம், திருஅவையின் மறையுடலாகவும் 'முள்' என்ற பதம், இன்றைய திருஅவை சந்திக்கின்ற சவால்களையும், சறுக்கல்களையும் திருஅவையின் மறையுடலைக் காயப் படுத்தும் முட்களாகப் பார்க்க முடியும் அல்லவா? பவுலின் உடலைத் தைத்த முள் அவருக்கு கிடைத்த வெளிப்பாடு களில் தற்பெருமை பாராட்டாது இருக்க தாழ்ச்சியுடன் பணியாற்ற கடவுள் கொடுத்தது என்னும் கருத்தும் உண்டு. இதன்படி பார்க்கின்ற போது, நம் நிறுவன மையத் திருஅவை தன் னையே தாழ்ச்சியுடன் பணியாற்ற அழைப்பினைப் பெறுகிறது.

சமூகத் தளத்திலிருந்து, சமயத் தளத்திலிருந்து, உளவியல் தளத்திலி ருந்து, கிறித்தவ உருவாக்கத் தளத் திலிருந்து நம் திருஅவையைக் காயப் படுத்தும் தீமைகள் அனைத்துமே திருஅவையின் உடலில் தைத்த முட்கள் எனக் கூற இயலுமா? நிறு வனத்தன்மை, அதிகார பலம், செல் வச் செழிப்பு, சாதியம், வன்கொடு மைகள், பாலியல் முறைகேடுகள் இவையெல்லாம் இன்று உடலாகிய திருஅவையை தைத்துக்கொண்டே யிருக்கின்றன என்று சொல்வது சரியா இருக்கும் தானே? இவை நம் குடும் பங்கள். பங்குத் தளங்கள் மற்றும் நம் சமூகத்திலும் தாக்கங்களை ஏற் படுத்துகின்றன என்பதை பவுலின் துன்பங்களோடு ஒப்பிட முடியும் என நினைகின்றேன். பவுலின் 'உடலில் தைத்த முள்' என்ற கூற்றில் பவுலின் எண்ணம், பகிர்வு, அனுபவம் எது எனக் கூற முடியுமா என்பதை விட அவை இன்று நமக்கு கொடுக்கும் அழைப்பை உணர்ந்து பதிலிறுப்பு தர வேண்டும். உடல் மற்றும் முள் என்ற இந்த இரண்டு எதிரெதிர் பதங்களை ஒப்புரவாக்கும் 'அருள்' இன்று திருஅவைக்கு



தேவைப்படுகின்றது.

உள்ள உண்மையிலேயே பவுல் முள் என்று எதை கூறினார் என நாம் அறுதி யிட்டுச் சொல்லமுடியாது. பவுலின் குண நலன்களை வைத்தும், பவுலின் வாழ் வியல் எதார்த்தங்களை வைத்தும், பவு லின் பணிப் பளுவினை வைத்தும், பவு லின் எதிரிகளை மனதிற்கொண்டும், பவுலின் உடல் குறைபாடுகளை வைத் தும், இதெல்லாம் முள்ளாக : இருக்கக் கூடுமோ என்று நாம் யூகம் செய்ய முடி யுமே தவிர முடிவு செய்ய முடியாது. ஆயிரக்கணக்கான : வருடங்களாக எத் தனையோ நபர்கள் இந்த உடலில் தைத்த முள் பற்றி அருள் வாழ்வு ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், பாலியல் ரீதியாக வும், இறையியலைப் பேசியிருந்தாலும் இன்னமும் இது ஒரு புதிய தலைப்பாகவே, புதிய கருப்பொருளாகவே இருக்கின்றது. புதியது மட்டுமல்ல புதிரானதும் கூட.

“உடலில் தைத்த முள்” என் பதைக் குறித்துப் புதிதாக எதையும் நான் கட்டமைக்கவில்லை மாறாக இந்த முள் எமக்கு எப்படிப்பட்ட ஒரு புரிதலை கொடுக்கின்றது என்ற சூழல் மைய வாசிப்பை மட்டும் செய்திருக்கின் றேன். இதன் அடிப்படையில் விவிலியப் பார்வையையும் இறையியல் கண்ணோட் டத்தையும் வரிசைப்படுத்துகிறேன். 'முள்' என்பது ஒரு சீருடைய வெகுமதி யாக. திருத்தூதரின் அங்கீகாரமாக, அருட்பணிகளின் அடையாளமாக, போராட்ட வாழ்வின் பரிசாக, கிறிஸ்து வின் பாடுகளின் பகிர்தலாக இருக்கின் றது. இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில். எவையெல்லாம் நம்மை வளர விடாமல் குத்திக் கிழித்துக் காயப்படுத்திக் கொண்டிருக்கின்றனவோ அவைகளெல்லாம் முட்கள். இந்த முட்கள் அன்று பவுலின் வாழ்வைப் பாதித்தன. பவுலின் திருஅவையைப் பாதித்தன. இன்று நம்மையும் பாதிக்கின்றன. நமது திருஅவையையும் பாதிக்கின்றன. இவற்றோடு போராடும் வாழ்வை வென்றெடுக்க இறைவன் விரும்புகிறார்.

துன்பத்தின் வழிதான் மீட்பு. வலிக ளின் வழியில்தான் தான் நிறைவாழ்வு என்பதை உடலில் தைத்த முள் நமக்கு எடுத்தியம்புகிறது. போராட்டம்தான் ஒரு பணியாளருக்கு அர்த்தத்தை. அருளை, அங்கீகாரத்தை தருவது. அத்தகைய ஒரு போராளியாக நம்மை உருவாக்கக்கூடிய இந்த 'உடலில் தைத்த முள்'அனுபவம் அருளில் எதிர் கொள்ளப்படுகின்றது. இன்று நமது அருள்பணிகளுக்காக திருஅவைச் சமூகம் தவித்துக் கொண்டிருக்கிறது. நமது பணிகள் அருள் நிறைந்த பணிகளாக மாற முட்களாக நமது தமிழக திருஅவையை வாட்டும் சாதியம், பொருளாதார ஏற்றத் தாழ்வு, திருநிலையில் ஆதிக்கம், இன்னும் பற்பல முட்களை களைந்து முன்னேற முற் படுகின்ற போது இயேசுவின் இறையாட்சி கனவும் பவுலின் கிறிஸ்து உருவாக்கமும் நம் திருஅவையின் இலக்காக மாறி நிலை வாழ்வை இவ்வுலகில்பரிசளிக்கும்.

திருஅவை தந்தையர்களின் படிப் பினைகள் முள் என்பது அருள் வாழ்வுக்கான போராட்டம் என்கிறது. இறையியலாளர்கள், விவிலிய வல்லுநர்களின் கருத்துப்படி இது

**அருட்பணி. ம.விவின் ரோட்ரிக்ஸ் OCD**

மனித எதிரிகளின் போராட்டம். ஒரு சில விவி லிய ஆய்வாளர்களின் கருத்துப்படி, இது உடல் உள்ள போராட்டம் எதுவாக இருந்தாலும் போராட்டம் என்பது அங்கு பொதுவான ஒரு முள்ளாக இருப்பதை பார்க்கிறோம். இந்த போராட்டம் நவீன முறைகளில் இன்றும் நமது திருஅவையின் மறை உடலைக் குத்திக் கிழித்துக் கொண்டிருக்கின்றன என் பது உண்மை. இதற்கு எதிராக நாம் போராட வேண்டும். கடவுளின் அருள் ஒன்றே போது மானது என்ற பவுலின் கூற்றுப்படி இன்று கூட்டு இயக்க திருஅவையை நோக்கி பயணித் துக் கொண்டிருக்கின்ற நம்மை அருளுக்கான பாதைகளைக் கண்டு பிடிக்க பவுலின் போராட்டமும் பவுலின் இந்த உணர்ச்சிமிகு கூற்றும் அழைப்பு விடுக்கின்றன.

வரலாற்றுப் பின்னணி, விவிலியப் பின் னணி, பொருள்கோள் பின்னணி. இவற் றின் அடிப்படையில் பவுலுக்கு உடலில் தைத்த முள் அவரது வலுவின்மை, மனப்போராட்டம், திருஅவைப் பிளவு கள் என எது வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், நம் திரு அவைக்கும் நம் கிறிஸ்தவ வாழ்விற்கும் 'உடலில் தைத்த முள்' என்பது சாதி யம், பொருளாதார ஏற்றத்தாழ்வு, அதி கார பலம், நிறுவனத் தன்மை, திரு- நிலையினர் ஆதிக்கம் பாலியல் முறை கேடு. உளவியல் கோளாறுகள், அருட்பணி உருவாக்கத்தில் நம்பகத் தன்மையின்மை இவைகளெல்லாம் முட்கள் இன்று பவுலைப் போல கடவு ளின் அருள் போதுமானது என்று சொல்ல நாம் பங்கேற்புத் திருஅவையாக மாற வேண்டும். பாமரர் திருஅவையாக மாற வேண்டும். உடன் பயணிக்கும் திருஅவையாக மாற வேண்டும்.

“இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்” (2 கொரி 4:10) என்று சொன்ன பவுல் போல, துணிவைப் பெறுவோம். எந்நேரமும் சாவின் வாயிலில் நின்று கொண்டிருக்க (2 கொரி 4:11) நமக்கு முட்கள் அதிகமாகவே இருக்கின்றன. இந்த முட்களைக் களைந்திட அருளுக்காகப் போராடும் உலக திருஅவையின் முன்னெடுப்புகள், திருஅவையின் முயற்சிகளும் நம் வலுவின்மையில் வலிமை காண, மன நிலையில் இயேசுவாய் பணியில் பவுலாய் பாங்காய் செயற்பட, கூட்டியக்கத் திருஅவை கடவுள் தந்த போதுமான அருள் என்று உணர்ந்து முனைப்புடன் முன்னேற அழைப்பு விடுக்கின்றது பவுலின் “உடலில் தைத்த முள்” ●

## ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. நே. யூட்தாஸ்

**252.விகாரமான அல்லது அருவருப்பான செயற்பாடுகளையும் (Calumny) கவனக்கலைப்பான்களையும் எட்டாம் கட்டளை தடைசெய்கிறதா?**

விகாரமான அல்லது அருவருப்பான செயற்பாடு களையும் கவனக்கலைப்பான்களையும் எட்டாம் கட்டளையானது தடைசெய்கிறது. அத்தோடு கதைகாவுதல் போன்ற நம் அயலா-ரின் நடத்தையைப் பாதிக்கக்கூடிய அனைத்தும் தடைசெய்யப்படு கின்றது.

**253.உம் அயலாரைப்பற்றி தவறாக கதைத்து அவரை நீர் மனம் நோகப்பண்ணுகின்றபோது நீர் என்ன செய்ய கடமைப்பட்டுள்ளீர்?**

என் அயலாரைப்பற்றி நான் தவறாக கதைத்து மனம் நோகப்பண்ணியிருந்தால் என்னால் இயன்றளவிற்கு அவரது நற்பெயரை மீட்டு அவருக்கு திருப்தியை ஏற்படுத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒன்பதாம் கட்டளை**

**254.ஒன்பதாம் கட்டளை என்ன?** பிறர் மனைவியைக் கவர்ந்திட விரும்பாதே.

**255.ஒன்பதாம் கட்டளை எவற்றை தடைசெய்கிறது?**

ஒன்பதாம் கட்டளை பிறழ்வான சிந்தனைக்கும் ஆசைகளுக்கும் அறிவுபூர்வமாக உடன்படுதலையும், உடலின் முறைதவறிய உறவால் உருவாகும் அறிவு பூர்வமான காமத்தையும், ஆசையையும் தடை செய்கிறது.

**256.எவ்வாறான பாவங்கள் பொதுவாக எட்டாம் ஒன்பதாம் கட்டளைகளை மீறுகின்றன?**

எட்டாம், ஒன்பதாம் கட்டளைகளை மீறுகின்ற பொதுவான பாவங்களாக பெரும்தீனித்தனம், குடிபோதை, கட்டுக்கடங்கா கோபம், சோம்பல் தனம், கூடா நட்பு, செபிக்கத்தவறுதல் போன்ற வற்றை கூறலாம்.

**பத்தாம் கட்டளை**

**257.பத்தாம் கட்டளை என்ன?** பிறருக்கு உரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.

258.பத்தாம் கட்டளை எவற்றை தடைசெய்கிறது?

பத்தாம் கட்டளையானது அனைத்துப் பொறாமை யான, அபகரிக்கக்கூடிய எண்ணங்களையும் எம் அயலவருடைய சொத்துக்கள், இலாபங்கள் மட்டில் அநீதியான ஆசைகளையும் தடைசெய்கிறது.

**திரு அவையின் கட்டளைகள்**

**259.திரு அவைக்குக் கீழ்ப்படிய நாம் கடமைப்பட் டுள்ளோமா?**

நாம் திருஅவைக்குக் கீழ்ப்படிய கடமைப்பட்டுள் ளோம். ஏனெனில் திரு அவையின் பணியாளர்களுக்கு கிறிஸ்து கூறியிருக்கின்றார்: “உங்களுக்குச் செவி சாய்ப்பவர் எனக்கு செவிசாய்க்கின்றார். உங்களைப் புறக்கணிப்பவர் என்னை புறக்கணிக்கின்றார். என்னைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பிய வரையே புறக்கணிக்கின்றார்” (லூக்கா 10: 16).

## யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

### கல்விப் பணி

ஆயர் பொன்ஜீன் தமது ஆளுமையை நிலைநாட்டிய பல்வேறு துறைகளில் கல்வித் துறை மிகவும் முக்கியமானது. வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பல பின்னடைவுகளுடன் விளங்கி வந்த கத்தோலிக்க கல்வி முறையை முன்னிலைக்கு கொண்டு வந்தவர் இவர்தான். ஆயர் செமேரியாவின் காலத்திலிருந்தே இவர் தமது முத்திரையை கல்வித் துறையில் பதிக்கலானார்.

பின்தங்கிய நிலையிலிருந்த கத்தோலிக்க இளையோரின் கல்வியை முன்னிலைக்கு கொண்டுவருவது சமுதாயத்தை முன்னிலைக்குக் கொண்டு வருவதற்கான அத்தியாவசிய தேவையென்பதையுணர்ந்து ஆயர் செமேரியாவுக்கு ஒரு வலதுகரமாக இருந்து செயற்படத்துவங்கியிருந்தார் பொன்ஜீன் அடிகள்.

சமுதாயத்தைச் சீர்குலைத்துப்பல்வேறு தீமைகளைக் களையெடுப்பதற்கு ஒரே வழி நல்லதொரு கல்விமுறையை அறிமுகப்படுத்தி அதனை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதாகும். இந்தப் பின்னணியில் தான் ஆயர் செமேரியாவின் வழிகாட்டுதலுடனும், அனுசரணையுடனும் பொன்ஜீன் அடிகள் 1860ம் ஆண்டு வெளியிட்ட இலங்கையில் கத்தோலிக்க கல்வி பற்றிய சில வார்த்தைகள் A Few Words on Catholic Education in Ceylon என்னும் சிறிய பிரசுரமாகும்.

கத்தோலிக்கக்கல்வி குறிப்பாக கத்தோலிக்க இளையோர் கல்வி பற்றிய தேவையான வழிகாட்டுதல்களை இப்பிரசுரம் உள்ளடக்கியுள்ளதென ஆயர் செமேரியா குறிப்பிடுகின்றார். வடக்குத்திருத்தூது மாவட்டத்தில் கத்தோலிக்கப் பிள்ளைகளின் கல்வி நிலை பெருமைப்படக்கூடிய விதத்தில் இல்லை. பிரிந்த சகோதரர்களது பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது கத்தோலிக்கப் பாடசாலைகள் எவ்வளவோ பின்தங்கிய நிலையிலுள்ளன. பல கத்தோலிக்க பெற்றோர் கடவுள் தமக்குத்தந்த கட்டளைகளைப் புறம்தள்ளியவர்களாக தமது பிள்ளைகளின் அறிவியல், ஒழுக்கவியல், மறைக்கல்வி சம்பந்தமான விடயங்களில் அசமந்தமாயுள்ளனர். பெற்றோர் தமது பிள்ளைகளிடத்தில் கடவுள் தம்மைப் படைத்தார் என்றும் ஆண்டவராகிய மீட்பர் தம்மை மீட்டெடுத்தார் என்பதை முதலாகக் கற்றுக்கொடுக்க அக்கறை காட்டுவதாக இல்லை. 'உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு' (யோவான் 17:3) என்பதை அறியாது பல கத்தோலிக்கப்பிள்ளைகள் மீட்பின் மறையுண்மைகளை அறியாது முழு அறியாமையில் உள்ளனர். தொடர்ந்து ஆயர் செமேரியா

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

தமது திருத்தூது மாவட்டத்தில் கத்தோலிக்கக் கல்வியின் குறைபாடுகள், ஆண் பிள்ளைகள் கல்வி அதிலும் பார்க்க முக்கியத்துவம் வாய்ந்த பெண்பிள்ளைகள் கல்வி மற்றும் தமது பல்வேறு திட்டங்கள், அவற்றை நடமுறைப்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றிய விளக்கமாகத் தமது மேய்ப்புப்பணி மடலில் குறிப்பிடுகின்றார். இவையெல்லாம் பொன்ஜீன் அடிகளின் செயற்பாடுகளில் படிப்படியாக இடம் பெற்று வந்தமையை அவதானிக்கலாம். பொன்ஜீன் அடிகள் பற்றிய பிரசுரம் அமலமரித்தியாகிகள் சபை நிறுவனர் புனித யூஜின் டி மசனொட்டுக்கும் கிடைத்துள்ளது. இதன் பெறுமதியை விதந்துரைத்து புனித யூஜின் நற்செய்தியறிவிப்புப் பேராயத்துக்கும் எழுதி அதன் பொறுப்பளராகிய கார்தினாலைப்பார்க்கவேண்டுமெனவும் குறிப்பிடுகின்றார். பொன்ஜீன் அடிகளின் கருத்துக்கள் யாழ்ப்பாணத்திருத்தூது மாவட்டத்திற்கு மட்டுமல்ல முழு இலங்கைக்கும் பொருந்தும் என்றும் புனித யூஜின் குறிப்பிடுகின்றார்.

பொன்ஜீன் அடிகள் 1861 ம் ஆண்டு நவம்பர் 11ம் திகதி நற்செய்தியறிவிப்புப் பேராயத்துக்கு எழுதிய மடலில் தாம் முன்னர் கல்வி சம்பந்தமாக எழுதிய மடலுக்குப் பேராயத்தின் பொறுப்பளராகிய கர்தினாலும் பேராயமும் வழங்கிய ஆதரவு தம்மை மேலும் ஊக்கப்படுத்துவதாகவும் பிரிந்த சகோதரர்களுடன் இலங்கைத்தீவில் இடம் பெறும் போட்டியில் இன்னும் முனைப்புடன் செயற்படத்தமக்கு உந்துசக்தியாக இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

பொன்ஜீன் அடிகள் மேலும் குறிப்பிடுகையில் கத்தோலிக்கப் பாடசாலைகளின் நிலைமை பற்றி எழுதுகின்றார். இலங்கையின் சிறந்த கத்தோலிக்க பாடசாலைகள் என்று பார்க்கும் போது ஆயர் செமேரியா ஆண்டகை யாழ்ப்பாணத்தில் நடத்தும் இரண்டு பாடசாலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது. இவ்விரு பாடசாலைகளும் ஆரம்பத்தில் மட்டமானவையாகவே இருந்தன. ஆயினும் பல இடைவிடா முயற்சிகளின் பின் இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலைகளுள் முன்னணியில் தரப்படுத்தப்படுமளவுக்கு வளர்த்துள்ளன. ஆயினும் கிராமப்புறங்களில் உள்ள கத்தோலிக்க தமிழ் அல்லது ஆங்கில பாடசாலைகளது தரம் போதியளவுக்கு இல்லையென்றுதான் கூறவேண்டும். இளையோர் கல்விமுழுவதும் பிரிந்துபோன சகோதரர்கள் வசம்போயுள்ளபோது கத்தோலிக்க பாடசாலைகளை பெரிதாக எதனையும் எதிர்பார்க்க முடியாது. கத்தோலிக்க இளையோரின் கல்வியின் எதிர்காலம் கேள்விக்குரியதே.

இந்நிலையில் பரிசுத்த ரோமைத்திருப்பீடத்தினால் இலங்கையில் கத்தோலிக்க மத நம்பிக்கையின் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்கள் இந்த ஆபத்துவேளையில் குரல் கொடுக்காதுபோனால் தம்மீது வைக்கப்பட்ட நம்பிக்கைக்கு ஏற்புடையவர்களாக நடக்கவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். பொன்ஜீன் அடிகளுக்கு வரும் பல கடிதங்களை பார்க்கும் போது பாதிக்கப்படும் கத்தோலிக்க மக்கள் தாம் ஏதிர்நோக்கியிருக்கும் ஆபத்துக்களிலிருந்து ரோமைத்திருப்பீடம் தான் ஏதாவது செய்து தம்மை காப்பாற்ற வேண்டும் என்று ஏதிர்பார்ப்பது புரிகிறது. இங்கு கத்தோலிக்க பிள்ளைகளுடைய இரண்டுங்கெட்டான் நிலையை பொன்ஜீன் அடிகள் சுட்டிக்காட்டுகின்றார். தமது பிள்ளைகளை பிரிந்து போன சகோதர்களது அல்லது அரசு பாடசாலைகளுக்கு அனுப்பி அவர்களுடைய மதநம்பிக்கையை ஆபத்துக்குள்ளாக்கும் அல்லது இழப்பதற்கான சூழலையை ஏற்படுத்துவதா இல்லையா என்று பெற்றோர் குழப்பத்திலுள்ளமையை பொன்ஜீன் அடிகள் கோடிட்டுக் காட்டுகின்றார்.

பல பின்னடைவுகளை எதிர்நோகியிருந்த கத்தோலிக்கரின் கல்விநிலையை விளக்கமாகப் பொதுநிலையினர் முன்கொணர்ந்த பொன்ஜீன் அடிகள் அதற்கு முன்னதாக எழுத்துமூலமாக அரசுடனும், பாடசாலை ஆணைக்குழுமுன்னிலையிலும் கத்தோலிக்கர் கல்வியில் எதிர்நோக்கிவந்த முட்டுக்கட்டைகளை விளக்கியிருந்தார். இதனால் கல்வியில் அரசு கத்தோலிக்கரைப்பொருத்தளவில் சற்றுத்தாராளகொள்கையைச் கடைப்பிடிக்க அழுத்தம் கொடுத்தார். இவ்வாறான செயற்பாடுகள் எல்லா பாடசாலைகளும் (கத்தோலிக்க பாடசாலைகள் உட்பட) அரசு உதவிபெறும் பாடசாலை களாக மாற வழியேற்பட்டது. முதலில் பிரிந்த சகோதரர்களுக்கு மட்டும் கிடைத்த அரசு உதவி பின்னர் படிப்படியாக கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் கிடைத்தது. பொன்ஜீன் அடிகள் அத்துடன் நிற்கவில்லை. பௌத்த, இந்து, முஸ்லீம் பாடசாலைகளும் அரசு உதவி பெறவேண்டும் என்றும் எல்லா சமயங்களும் பாகுபாடின்றி நடத்தப்படவேண்டுமென்றும் வாதிட்டார்.

(தொடரும்...)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
**- அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்**

23

(சென்றவாரத் தொடர்ச்சி..)



**9.2 2ஆம் வத். சங்கத்தில் தென் அமெரிக்க ஆயர்களின் தாக்கமும் விடுதலை இறையியல் தொடக்கமும்.**

(இந்த முயற்சியில் 1992ஆம் ஆண்டில் நான் கண்டி தேசிய குருமடத்தில் இறையியலுக்குப் பொறுப்பாயிருந்த பொழுது, தென் அமெரிக்க ஒரு குருவையும் இரு துறவிகளையும் இலங்கைக்கு அழைத்து, கண்டி, தேவத்த, திருகோணமலை, யாழ்ப்பாணத்தில் மறைமாவட்ட ரீதியிலே அடிப்படை குழுமங்களைப்பற்றிக் கூட்டங்கள் நடத்தினேன். அதே துணிவில் கண்டி தேசிய குரு மடத்திலும் யாழ் புனித சவேரியார் குருமடத்திலும், அடிப்படை கிறீஸ்தவ குழுமங்கள் என்ற பாடத்தையும் ஆரம்பித்தேன். ஆனால் அப்பாடம் நீடித்திருக்காததையிட்டு வருந்துகின்றேன்)

**9.3 தென் ஆபிரிக்க, வட அமெரிக்க கறுப்பு மக்களின் விடுதலைப் போராட்டமும் கறுப்பு இறையியலை பிறப்பித்தது** ( Apartheid & Negro Black Theology)

ஆபிரிக்கக் கண்டத்தின் நாடுகள் பல விதமான அடிமை தனங்களுக்கு நீண்ட காலமாக உள்ளாகி இருந்தனர். அடிமை வியாபாரம் ஏராளமாக நடந்தது. காலனித்துவ காலத்திலே கிறிஸ்தவத்தைப் பரப்பிய ஐரோப்பிய மறைபரப்பாளர்களும் தென் ஆபிரிக்காவிலே காலனித்துவத்தின் பின் சிறுபான்மையான வெள்ளையர்களும் ஆபிரிக்க கறுப்பு மக்களும் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். ஆனால் பெரும்பான்மையான கறுப்பு கிறீஸ்தவர்களும், கறுப்பு இஸ்லாமியரும், சிறுபான்மையான வெள்ளையர்களினாலே அளப்பெரும் பலவிதத்தில் முடக்கப்பட்டு வாழ்ந்தார்கள். இந்த ஒடுக்கு முறையை அப்பாதெயிட் (Apartheid) என்று அழைத்தனர். இதற்கு எதிராகத்தான் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நெல்சன் மன்டேலா (Nelson Mandela, African National Congress ANC) தலைமையில் கறுப்பு ஆபிரிக்கர் போராடினார்கள். இதற்கு அங்கிலிக்கன் பேராயர் டெஸ்மன் ரூற்று ( Desmond Tutu) முக்கிய பங்களித்தார். (இவரை நவ. 1994க்கு பின் பல முறை சந்தித்து, தமிழரின் போராட்டத்திற்கு அவரின் ஆதரவை பெற்றேன்) இத்துடன் 120 கிறீஸ்தவ இறையிலாளர்கள் இணைந்து கறுப்பு மக்களின் போராட்டத்திற்கு தமது ஒத்துழைப்பை கைறோஸ் (Kairos) என்ற ஏட்டின் வழியாக வழங்கினர். ( இந்த ஏட்டை ஆதாரமாகக் கொண்டே, நான் இனப் பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும் என்ற சிறிய நூலை வெளியிட்டேன்.)

வட அமெரிக்காவின் தென்பகுதியிலே அதிகமானோர் கறுப்பு அமெரிக்கராகவும், கிறீஸ்தவர்களாகவும் இருந்தார்கள் (Black Americans Negroes) இருந்தும் அமெரிக்காவின் சட்டங்களிலே அவர்களை ஒருவிதத்திலே புறக்கணித்து, தாழ்மைப் படுத்தி, ஒதுக்கி வாழ்ந்தார்கள் வெள்ளைமக்கள். அதற்கெதிராக கறுப்பு அமெரிக்கர்கள் தங்களுடைய விடுதலை இயக்கங்களை நேர்மையான நீதியான அதாவது வன்முறையற்ற போராட்டங்களினாலே முன்னெடுத்தார்கள். அதிலே முன்நின்றவர் மகாத்மா காந்தியின் வன்முறையற்ற போராட்டத்தைப் பின்பற்றிய மார்ட்டீன் லூதர் கிங்.(Martin Luther King) அந்தப் போராட்டம் மிகவும் முன்னேற்றமடைந்து வெற்றி பெற்றது.

எங்களுடைய காலத்திலே அப்பேற்பட்ட ஒரு கறுப்பு அமெரிக்கர் தான் பராக் ஒபாமா ( Barack Obama ) என்று பெயருடன் அமெரிக்காவின் தலைவராகவும் வந்துள்ளார், அவருடைய பெற்றோர் ஆபிரிக்கா கென்யாவிலே வாழ்ந்தவர்கள். ஒபாமா அமெரிக்காவின் கறுப்பினத்தைச் சேர்ந்தவர். இவர்தான் முதற் தடவையாக அமெரிக்க தலைவராக வரக்கூடியதாக இருந்தது. தன்னுடைய முதிர்ச்சியான முறையிலே, அவரும் அவருடைய பாரியார் மிச்சேலும் சேர்ந்து, முழு நாட்டையும் முன்னெடுத்தார்கள்.

சுருங்கக் கூறின், தென் அமெரிக்காவில் விடுதலை இறையியல் என்றும், வட அமெரிக்காவின் தென் பகுதியிலே கறுப்பு இறையியல் என்றும் (black theology), தென் ஆபிரிக்காவில் வெள்ளையரின் நிற வேற்றுமைக்கு எதிரான விடுதலை இறையியல் (anti-apartheid) நடந்தது.

**9.4 தென் அமெரிக்க ஆயர்களைப்போல் ஆசிய ஆயர்கள் ஏன் நடந்து கொள்ள முடியவில்லை?**

ஆசிய மக்கள் மதங்களிலும் கலாச்சாரங்களிலும் மூழ்கி, மயங்கி, மனித சமுதாயத்தில் இருக்கும் அநீதிகள் ஒடுக்கு முறைகளை கண்டுகொள்ளாது வாழ்கின்றனரா? அல்லது கண்டும், அவைகளை மத வழிபாடுகளுடன் சமாளித்து வாழுகின்றனரா?

ஏன் ஆசிய நாடுகளில் சமூக அநீதிகள் அடக்கு முறை களுக்கு எதிராக பெரியளவில் போராட்டங்கள் எதுவும் முன் னெடுக்கபடவில்லை. ஒரு விடுதலை இறையியலை பிறப்பிக்கவு மில்லை. ஏன்?

ஆசியக் கண்டம் மக்கள் நிறைந்த கண்டம் மாத்திரமல்ல. மதங்கள் பூர்வீக பல கலாசாரங்களையும் கொண்டுள்ளது. மக்கள் இவைகளில் நீண்ட வேர்களை கொண்டு வாழ்கின்றனர். அனேகமானோர் இவைகளில் மூழ்கி மயங்கி விடுகின்றனர்.

கார்ள் மார்க்ஸ் (Karl Marx) என்ற ஜேர்மன் மெய்யியலாளர், தனது பொதுவுடமை கொள்கைகளை வெளியிட்ட பொழுது, மதங்கள் மக்களின் மயக்க வஸ்தென்றார். (Religions are the opium of the people). இதைக் கிறிஸ்தவர்களும் மற்றைய மதங்களும், மாக்சியத்தை புரிந்து கொள்ளாது எதிர்த்து தள்ளினர். ஆனால் கார்ள் மார்க்ஸின் ஆளமான கருத்து என்னவென்றால், மதத்தில் மயங்கி மருண்டு போகிறவர்களுக்கு வாழ்க்கையின் யதார்த்த நிலைமைகள் புரியாது. மதுபானத்தில் மயங்கியவனுக்கு குடும்பத்தின் துன்பங்கள் புரியாது. மதத்தின் வழிபாடுகளில் மாத்திரம் மூழ்கியவர்கள் சமூகத்தில் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் துயரங்களை கவனத்தில் எடுத்து கொள்வதில்லை.

84 வீதம் கத்தோலிக்கரை கொண்ட பிலிப்பைன்ஸ் தீவில்தன்னும் மார்க்கோசின் நீண்ட சர்வ அதிகாரத்திற்கு எதிராக மக்கள் சக்தி (peoples' power) எழுந்து அரசாங்கத்தை மாற்றியது. கோறேயாவிலும் அரசாட்சிக்கு எதிராக மக்கள் புரட்சிகள் நடத்தினர். ஆனால் அந்நாடுகளின் திருஅவைகளிலிருந்து நிரந்தரமான விடுதலை இறையியல் பிறக்கவில்லை.

ஆசிய திருஅவைகள் வெவ்வேறு ஐரோப்பிய காலனித்துவ நாடுகளினாலே ஆரம்பிக்கப்பட்டவை. அவைகளின் ஆயர்கள் வெவ்வேறு ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்ததன் காரணமாகவும், வெவ்வேறு நாட்டின் மத கலாசார சூழலிருந்த திரு அவைகளை வழி நடத்தியதாலும், உரோமை திரு அவையின் பிரமாணிக்கமான கிழைகளாகவே செயற்பட்டனர்.

(தொடரும்...)




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(நேசன், யாழ்ப்பாணம்)*

**கே: அண்மையில் இலங்கையில் குரங்குகளின் எண்ணிக்கை அதிக அளவில் பெருகிப்போய் இருப்பதால் ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும்திட்டம்பற்றிவிவசாயஅமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது. குரங்குகளை ஏற்றுமதி செய்தாவது இலங்கை கொஞ்சம் டொடர்களை - அன்னியச் செலாவணி யைப் பெற்றுக் கொள்ளலாம் அல்லவா! இத்திட்டம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: நேசன், அருமையான திட்டம். இத்திட்டம்பற்றி ஒருவர் குறிப்பிட்டபோது, இத்திட்டத்தின் வழியாக அன்னியச் செலாவணியை நாடு கொங்சமாவது பெற்றுக்கொள்ளும். அதேவேளை, இந்த ஒரு இலட்சத்தோடு இன்னும் 225ஐச் சேர்த்தனுப்பிவிட்டால் நாடுகொஞ்சம் உருப்படவழிபிறக்கும் என்றும் குறிப்பிட்டார்! எது எவ்வாறு இருப்பினும் அருமையான திட்டமே!

*(பாரி, யாழ்ப்பாணம்)*

**கே: வரலாற்று சிறப்புமிக்க நெடுங் கேணி வெடுக்குநாறி ஆதிலிங்க ஆலய அழிப்பு, கச்சைதீவு புத்தர்சிலை வைப்பு என்பன திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்கள் தொடர்வதையும் வரலாற்று அழிப்பையும் கோடிட்டுக் காட்டு கின்றன. இவற்றைத் தடுக்காது இப்படியே விட்டுவிட்டால் என்னாகும்?**

ப: பாரி, இப்படியே விட்டுவிட்டால், 'வெடுக்கு நாறி' என்ற இடம் 'வெறுக்குநாறா' எனவும் 'ஆதிலிங்க' ஆலயம் 'ஆதிசிங்க' ஆலயமாகவும் விரைவில் ஆகிவிடும். இவைபோல நாளடைவில் 'கச்சைதீவு', 'கஞ்சாய்தீவு' ஆகவும் மாறிவிடும். எனவே, உள்வீட்டு வேற்றுமைகளைப் புறந்தள்ளி அனைவரும் ஓரணியில் நின்று விரைந்து செயற்படவில்லை என்றால் நாம் மேலே குறிப்பிட்டவை தான் நடக்கும்!

*(விதுசன், யாழ்ப்பாணம்)*

**கே: உங்கள் குணத்தைப் பார்த்து பெயர் வைத்தார்களா? அல்லது வைத்த பெயருக்கேற்ப நீங்கள் இருக்கின்றீர்களா?**

ப: விதுசன், நமது குணத்தைப் பார்த்தும் பெயர் வைக்கவுமில்லை, பெயர் வைத்ததின் பின் அப்பெயருக்கேற்ப வாழவேண்டுமென்றும் நாம் வாழவில்லை! பெயர் பிறப்பின் போது வைக்கப்பட்டது. நான் நானாக இருக்கின்றேன், நான் நானாக வாழ்ந்துகொண்டிருக்கின்றேன் என்றுதான் நான் நினைக்கின்றேன்!

*(நாதன், யாழ்ப்பாணம்)*

**கே: அண்மைக் காலமாக முரண்பாடுகள் முற்றி கொலைகளில் சென்று முடிகின்றது. அண்மையில் அடுத்தடுத்துச் சில கொலைகள் நடந்திருக்கின்றன. என்ன காரணம்? ஏன் இப்படி?**

ப: நாதன், அருளுக்குப் பதிலாக மக்களை இருள் ஆட்சி செய்கின்றது. புரிகின்றதா? நரி, சுரியில் அகப்பட்டதுபோல போதை எனும் மரணப்பொறியில் நமது சமூகம் சிக்கித் தவிக்கின்றது. இப்பொறிக்குள் இன்னும் பலரும் விழுந்து போகாமல் இருக்க ஆவனை செய்யப்படவில்லை என்றால், எல்லாப் பொருட்களுக்கும் விலையேறிக் கொண்டு போகின்ற ஒரு சூழலில் மரண ஓலங்கள் மட் டும்தான் மலி-வாக மாறும்!

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஒருவர் இனப்பிரச்சினையே நாட்டில் கிடையாது. தமிழ் அரசியல் வாதிகள்தான் அவ்வாறு சொல்லி சிங்களவர்களை இனப் படுகொலையாளர்களாகச் சித்தரிக்கின்றார்கள் எனக் கூறியிருக்கின்றார். இவரைப்போல இன்னும் சிலர் இவ்வாறான கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள். இக்கருத்தினைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

ப: யோசவ், இவ்வாறானவர்கள்தான் 'மேதகு'க்கள் உருவாகக் காரணமானவர்கள். இன்னொருவகையில்சொல்லப் போனால் 'மேதகு'க்கள்தான் இவர்களுக்குப் பதிலளிக்கக் கூடியவர்கள்! என்ன செய்வது? 'மேதகு'க்கள் இல்லாதசூழலில் இந்த 'மேதாவி'களைநாம் மேலும்கீழுமாகப் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியிருக்கின்றது!

# நம்பிக்கை கிறிஸ்தவ வாழ்வின் கொடை

**அளவையூர் அமலன்**

**முகவுரை**

நம்பிக்கை இல்லாத வாழ்வு ஆதவன் இல்லாத வானம் போன்றது. நாம் இவ்வுலகில் வாழுகின்ற ஒவ்வொரு கணமும் விரும்பியோ விரும்பாமலோ நம்பிக்கையோடு தான் வாழ்வை முன்னெடுக்கின்றோம். இரவு படுக்கைக்குச் செல்லுகின்ற போது காலையில் விழித்தெழுவோம் என்ற நம்பிக்கையோடுதான் துயில் கொள்கின்றோம். எமது பெற்றோரும், உடன் பிறப்புக்களும் எமக்குத் தீமை செய்ய மாட்டார்கள் என்று நம்புகின்றோம். வாழ்வில் துன்பங்கள் ஏற்படும்போது அவை நீங்கும் என்றும், உடல் நலம் குன்றும் போது சுகமடைவோம் என்றும் நம்புகின்றோம். எமக்குச் சேவை செய்கின்ற ஆசிரியரை, மருத்துவரை இன்னும் பலரை நம்பிக்கையோடு அணுகுகின்றோம். எனவே எமது வாழ்வு இறைவனால் எமக்கு வழங்கப்படும் நம்பிக்கை எனும் மாபெரும் கொடையிலேதான் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

**கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கை**

எமது சாட்சியம் நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு இறை நம்பிக்கையிலே அத்திவாரமிடப்பட்டுள்ளது. இறைமகன் இயேசுவின் உயிர்ப்புத்தான் எமது நம்பிக்கையை ஆழப்படுத்துகின்றது. இயேசுவை அடக்கம் செய்த, உயிர்ப்புக்குப் பின் வெறுமையான கல்லறையிலிருந்து எழும் ஒளி தான் எமது வாழ்வின் நம்பிக்கைக் கீற்றாக அமைகின்றது. நாம் வாழ்வின் சிலுவைகளால் அலைக்கழிக்கப்படும்போது துணிவோடு வாழ உறுதுணையாக இருக்கின்றது. நம்பிக்கையோடு வாழ்கின்ற போது இறைவன் எமக்கு உறுதுணையாக இருக்கின்றார். எனது உடலும் உள்ளமும் நைந்து போயின. கடவுளே என் உள்ளத்துக்கு அரணும் என்றென்றும் எனக்குரிய பங்கும் ஆவார். (தி.பா.73:26)

**நம்பிக்கை இறைவனின் கொடை**

இறைவனால் வழங்கப்படும் நம்பிக்கை வாழ்வு மாபெரும் கொடையாகும் "நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக் கொள்வீர்கள் (மத் 2122) கடவுள் தம்மிடம்நம்பிக்கை கொள்வோரைப் பேணிப் பாதுகாக்கின்றார் அவர்கள் மீது தம் ஆசியைப் பொழிகின்றார். நாம் நமது ஆற்றலில் நம்பிக்கை வைக்காமல் இறைவன் மீது நம்பிக்கை வைப்பதுதான். உண்மையான கிறிஸ்தவ வாழ்வாகும். நமது நம்பிக்கை ஆழமானதாக, உறுதியானதாக, உண்மையானதாக இருக்கின்றதோ அந்த அளவுக்கு இறைவனின் அருள் நிறைவாக நமக்குக் கிடைக்கும். நம்பிக்கையோடு செபிப்பவர்களின் மன்றாட்டைக் கடவுள் கேட்காமல் போகார். கடவுள் நம்பிக்கை இருந்தால் எல்லாம் சாத்தியமாகும். சீடர்களால் ஓட்டமுடியாத அசுத்த ஆவியை இறைமகன் இயேசு விரட்டியடித்து "நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும் (மாற் 9:23) என்று அசுத்த ஆவி பிடித்த பையனின் தந்தையின் நம்பிக்கையை மெச்சுகின்றார்". உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம் மலையைப் பார்த்து இங்கிருந்து பெயர்ந்து அங்கு போ என்றால் அது பெயர்ந்து போகும்" (மத். 17:20) உறுதியான நம்பிக்கையால் தான் நிறைவான அருள் எமக்குக் கிடைக்கும்.

**அற்புதங்களின் வெளிப்பாடே நம்பிக்கை**

ஆழமான நம்பிகையால் அற்புதங்கள் நடைபெறுவதை நாம் காணுகின்றோம். பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கு எனும் நோயினால் துன்புற்ற பெண் ஆழமான நம்பிக்கையோடு இறைமகன் இயேசுவின் ஆடையின்விளிம்பைத்தொட்டு நலமடைகின்றாள். மகளே! உனது நம்பிக்கை உன்னை நலமாக்கியது என்று கூறிய இயேசு அவளுக்கு அமைதியைக் கொடுக்கின்றார். மார்த்தாள், மரியா தனது சகோதரனுக்கு இயேசுவால் உயிர்கொடுக்க முடியும் என்று ஆழமாக நம்பினார்கள். சூழ இருந்தவர்கள் சந்தேகத்தோடுபார்த்தபொழுது 'லாசரே வெளியே வா' என்று வார்த்தை வல்லமையால் உயிர் கொடுகின்றார். நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான் என்ற இயேசுவின் மீதான ஆழமான நம்பிக்கை வெற்றி பெறுகின்றது. இவ்வாறு பல அற்புதங்கள் நடைபெற ஆழமான நம்பிக்கையே காரணம் என்பதை நற்செய்திகளிலே நாம் பார்க்கின்றோம்.

**நம்பிக்கையீனம் களையப்படவேண்டும்**

வாழ்வில் நம்பிக்கையீனம் ஏற்படும் போது நாம் சோர்ந்து போகின்றோம். என்னால் முடியும். இறை வல்லமையோடு என்னால் சிலுவையைச் சுமக்கமுடியும் என்று நம்புகின்றபோது வாழ்வு வளமாக மாறும். இயேசு கடல் மீது நடந்து வரு-வதைக் கண்ட பேதுரு தானும் அவ்வாறு நடக்கவேண்டும் என்று விரும்பினார். அந்த விருப்பத்தை இயேசுவிடம் சொன்ன போது நடந்து வர ஆணையிடுகின்றார். பேதுருவும் கடல் மீது இறங்கி நடந்து வரும் போது நீரில் மூழ்குகின்றார். ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் என்று அலறுகின்ற போது ஆண்டவர் கரம் கொடுத்துக் காப்பாற்றுகின்றார். நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம் கொண்டாய் என்று அவரை உற்சாகப்படுத்துகின்றார். (மத்தேயு 14: 22-33) எமது வாழ்வில் சிறிய துன்பம் ஏற்பட்டால் கூட நாம் நம்பிக்கை இழக்கின்றோம். சோதனைகள் வந்தாலும் இடுக்கண் நேர்ந்தாலும் கடவுள் என்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையோடு வாழ நாம் முன்வர வேண்டும்.

**நிறைவாக**

ஆபிரகாம் இறைவனை முழுமையாக நம்பியதால் தான் மகிமைப் படுத்தப்பட்டார். இன்றும் கூட நற்கருணைப் பிரசன்னத்திலும், மாதாவின் பதிகளிலும் நம்பிக்கையின் வெளிப் பாடாக அற்புதங்களும் அருங்கொடைகளும் நடைபெறுவதை நாம் காணுகின்றோம். இறைவனை நம்புவோம். அவரின் மாபெரும் கொடையான வல்லமையுள்ள இரக்கத்தை நம்புவோம். எமது வாழ்வின் மையமாகவும், ஊற்றும் உறைவிடமாகவும் இருக்கும் நற்கருணையை நம்புவோம். எமது நம்பிக்கையை ஆழப் படுத்தும், வாழ்வுக்கு வழிகாட்டும், வல்லமையுள்ள இறைவார்த்தையை நம்புவோம். இறைவா எமது நம்பிக்கையை ஆழப்படுத்தும் என்று அனுதினமும் மன்றாடி இறை நம்பிக்கை கொண்ட கிறிஸ்தவர்களாக வாழ்வோம்.


1ம் ஆண்டு விண்ணக வாழ்வு

மண்ணக வாழ்வு 16 . 06 . 1956

விண்ணக வாழ்வு 30 . 04 . 2022



அமரர்
**திரு. யோவான் யேசுராசா**

அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
அன்பிற்கு இலக்கணமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து
எம்வாழ்வில் ஒளியேற்றிய
எங்கள் அன்பு அப்பாவே!
நீங்கள் இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகிறோம்.



12ம் ஆண்டு விண்ணக வாழ்வு

மண்ணக வாழ்வு 19 . 01 . 1977

விண்ணக வாழ்வு 19 . 10 . 2011



அமரர்
**திருமதி. கோகிலதாஸ் ஜிமாலினி சகாரூபி (விஜி)**

பன்னிரண்டு ஆண்டுகள் பறந்தோடிப்போயின
பாசநினைவோ எம்முயிரோடு வாழ்வன
நித்தமும் நெஞ்சிலே நின்றாடும் நாட்கள்
நெறியாக நாம் ஏந்தும் அர்ச்சனைப்பூக்கள்
குத்து விளக்கே எம் குடும்ப நிறை ஒளியே
குளமாகி நிறைவதேன் எங்கள் விழியே
உத்தமியே உங்கள் வாழ்வே ஒரு காவியம்
உள்ளார்ந்த உணர்விலே நிலையான ஓவியம்.

28.04.2023 வெள்ளிக்கிழமை புனித அந்தோனியார் ஆலயத்தில்
காலை 6.00 மணிக்கு திருப்பலி இடம்பெறும்

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி கிழக்கு கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்

AD/31

# அடைக்கல அன்னை ஆலய இளையோரின் உயிர்ப்பு விழா நிகழ்வுகள்



உயிர்ப்புப் பெருவிழாவை முன்னிட்டு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 09ஆம் திகதி ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்தகுமார் அடிகளின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறுவர்கள் இளையோர்கள் பெரியவர்களெனப் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

# பெரிய விளானில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு



பெரியவிளான் பங்கிலுள்ள பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 30ஆம் திகதி பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற அருட்சாதனத் திருப்பலியில் 55 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

# பொம்மைக் காட்சியில் இயேசுவின் பாடுகள்



தவக்காலத்தை முன்னிட்டு இயேசுவின் பாடுகள் மரணத்தைச் சித்தரிக்கும் பொம்மைகளால் அமைக்கப்பட்ட அழகான காட்சி அமைப்புக்கள் யாழ். குருநகர் புதுமை மாதா ஆலய வளாகத்தில் மக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இறைவனின் ஜெஸ்தமனித் தோட்ட வேண்டுதல், வானதூதர் தோன்றுதல், இறைமகன் இயேசு கைது செய்யப்படல், தலைமைக் குருக்களின் முன்னால் விசாரணைக்கு நிறுத்தப் படல், பிலாத் துவின் தீர்ப்பு, சிலுவை சுமப்பு, இறைமகனின் இறப்பு, உயிர்ப்பு என்பன அமையப் பெற்றிருந்ததுடன் ஏராள மான மக்கள் இவற்றைத் தரிசித்து ஆண்டவரின் பாடுகளுடன் தங்களை இணைத்துக்கொண்டு இறைவேண்டல் செய்தனர்.

# புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் ஆங்கிலத் தினம்



புனித பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின், புனித நியூமன் ஆங்கில மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆங்கில தின விழாவானது, கடந்த மாதம் 23ம் திகதி ஜோய் கிறிசோஸ்ரம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாகாண அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட் தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், அமதி, கலந்து சிறப்பித்திருந்தார். அருட்சகோதரர்களின் ஆங்கில அறிவினையும், மொழிப்புலமையினையும் மேம்படுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்ட ஆங்கில மன்றமானது இவ்வருடத்திலே தனது 35வது அகவையினை நினைவுகூர்ந்து மகிழ்கின்றது. அந்தவகையிலே, நிகழ்வுகள் அனைத்தும் குருத் துவக் கல்லூரியின் அதிபர் T. J. கிருபாகரன் அடிகளாரின் வழிகாட்டலிலும், மன்றக்காப்பாளர், M. M. H. ஞானேந் திரன் அடிகளாரின் தலைமையிலும், மன்ற உறுப்பினர்களின் அயராத உழைப்பினால் நிகழ்வுகள் அனைத்தும் செவ்வனே நிறைவுபெற்றன.

சிறப்பு நிகழ்வாக "அஞ்சலி: சவாலை வென்ற குடும்பம்" எனும் சிறப்பு நாடகம், அருட்தந்தை ஜெராட் சவிரிமுத்து அடிகளாரின் நெறியாள்கையிலே மேடையேற்றப்பட்டது. நாடகத்துடன் சேர்ந்து அனைத்து நிகழ்வுகளும் அனைவரது பாராட்டுக்களையும் பெற்றன.

# மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் புதிய அருட்பணிச் சபை



மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் புதிய பங்குத்தந்தை அருட்பணி லோறன்ஸ் அடிகளின் தலைமையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அருட்பணிச்சபை அண்மையில் பணிப்பொறுப்பேற்றுக் கொண்டனர்.

# முல்லை இளையோரின் உயிர்ப்பு விழா நிகழ்வுகள்



முல்லைத்தீவு புனித கார்லோ இளையோர் ஒன்றியத் தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட உயிர்ப்பு ஞாயிறு சிறப்பு நிகழ்வு கடந்த 09ஆம் திகதி முல்லைத்தீவில் நடை பெற்றது.

முல்லைத்தீவுக் கடற்கரையில் காலை நடைபெற்ற படகோட்டப் போட்டியைத் தொடர்ந்து மாலை புனித கப்பலேந்தி மாதா ஆலய முன்றலில் கலாசார, கிராமிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பங்குத்தந்தை அருட்தந்தை அகஸ்ரின் அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் முல்லைத் தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள்.

# புது மடத்தில் புதிய இல்லம் கையளிப்பு



புதுமடம் கர்த்தர் ஆலய புனித வின்சென்ற் டி போல் பந்தியின் ஏற்பாட்டில் அப்பிரதேசத்தில் வாழும் கணவனையிழந்த வீடற்ற பெண் ஒருவருக்கு அவர் தங்குவதற்கான வீடொன்று அமைக்கப்பட்டுக் கடந்த 09.04.2023 ஈஸ்டர் தினத்தன்று அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பங்குத்தந்தை அருட்தந்தை றெக்ஸ்சவுந்தரா அடிகளின் வழிகாட்டலில் பங்கு மக்களின் உதவியுடன் நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதிக்கு இவ்வீடு அமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மல்வத்தில் இரத்த தானம்




மல்வம் இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இரத்த தான முகாம் 02ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்வம் திருக் குடும்ப ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அடிகளின் வழிகாட்டலில் 50க்கும் அதிகமா னவர்கள் இந்நிகழ்வில் கலந்து குருதிக்கொடை வழங்கியிருந்தார்கள்.

# புனித நீற்றம்மா ஆலயத் திருவிழா



இளவாலை புனித நீற்றம்மா ஆலய வருடாந்தத் திரு விழா கடந்த 15ஆம் திகதி பங்குத்தந்தை அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளின் தலைமையில் இடம்பெற்றது.

11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த நாள் வழிபாடுகள் நடைபெற்றுவந்த நிலையில் 14ஆம் திகதி நற்கருணை விழாவும் 15ஆம் திகதி திருநாள் திருப்பலியும் இடம்பெற்றன.

திருவிழாத் திருப்பலியை இளவாலைப் பங்குத்தந்தை அருட்தந்தை எறிக்றொசான் அடிகள் தலைமை தாங்கி நிறைவேற்றினார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.